விலை ரூபா: 5.00

பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி27 வியாழக்கிழமை (12.09.2002) தொலைபேசி 3378 ஒலி 267




## ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும்

# 19வது திருத்தச் சட்டமூலம்

# வர்த்தமானியில் அறிவிப்பு!

## எதிர்க்கட்சிகளின் திருத்தங்களுக்கும் அமைச்சரவை அங்கீகாரம்

(நமது நிருபர்)

**பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.**

**நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின் மூலம் அரசாங்கம் தோல்வி அடைந்தால் மட்டுமே பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.**

**19வது அரசியல் திருத்தத்திற்கு மட்டும் எம்.பிக்கள் தாம் விரும்பியவாறு வாக்களிக்கலாம். அதற்கெதிராக அவர்கள் மீது கட்சி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது.**

**இவ்வாறான திருத்தங்களுடன் வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு வெளியாகியது.**

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்திப் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதவாறு அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டமூலம் நேற்று நள்ளிரவு வர்த்தமானி அறிவித்த ் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டமூலத்திற்கு தமிழ்கட்சிக் கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி ஆகியவற்றின் எம்.பிக்கள் ஆதரித்து வாக்களிக்வுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிக்குப்

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானப்பேச்சில் கலந்து கொள்ள

# அரசு- புலிகள் பிரதிநிதிகள் நாளை தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையே 16ம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு அரச தரப்புக்குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை தாய்லாந்து பயணமாகவுள்ளனர்.

அமைச்சர்கள் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்து மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக ஆகியோரே அரச தரப்புப் பிரதிநிதிகளாக தாய்லாந்து செல்லவுள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகள் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பால

(10ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த விடுதலைப்புலி உறுப்பினரை பாதுகாப்பு அமைச்சர் பார்வையிட்டார்

அதிகாரத்தை பயன்படுத்திப் பாராளு மன்றத்தைக் கலைக்க முடியாதவாறு அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டமூலம் நேற்று நள்ளிரவு வர்த்த டப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டமூலத்திற்கு தமிழ்கட்சிக் கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி ஆகியவற்றின் எம்.பிக்கள்

கனவே அறிவித்துள்ளனர்.

அரசாங்கம் தற்போது மேற் கொண்டு வரும் சமாதான முயற்சிக்குப்

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ். புதிய பரிவர்த்தனை நிலையத்தை அமைச்சர் இம்தியாஸ் திறந்துவைத்தார்

(யாழ்ப்பாணம்)

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று ஒரு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

முற்பகல் 10மணிக்கு யாழ். வந்த அமைச்சரை யாழ் ரெலிகொம் நிறுவன உயரதிகாரிகள் வரவேற்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அமைச்சர் யாழ் ரெலிகொம் நிறுவனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அமைச்சருடன் ரெலிகொம் நிறுவனத் தலைவர் திலக்சுமதிபால, நிறுவனப் பணிப்பாளர் சுகின்அனான், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ் பல்கலைக்கழகத் துணை

(10ம் பக்கம் பார்க்க)

## ரூ. 10 ஆயிரம் முன்னுரிமைக் கட்டணம் நீக்கம்

# தொலைபேசி இணைப்பை வழங்கும் அதிகாரம் அமைச்சர் மகேஸ்வரனிடம்

## தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்ட முன்னுரிமைப் பணம் ரூபா 10ஆயிரம் இனிமேல் செலுத்தப்படத் தேவையில்லை என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அறிவித்துள்ளார்.

நேற்று யாழ் ரெலிகொம் நிலையத்தில் இடம்பெற்ற மூன்றாவது தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

யாழ் குடாநாட்டில் இனிவருங் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புப் பெற விண்ணப்பிப்பவர்களை இந்து

(10ம் பக்கம் பார்க்க)

## அவசர விவாதப் பிரேரணையால்

# பாராளுமன்றில் நேற்று கூச்சலும் குழப்பமும்!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனா நேற்று பாராளுமன்றில் அவசர விவாதம் ஒன்றிற்கான பிரேரணை ஒன்றை முன்வைத்ததை அடுத்து சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

அண்மையில் பருத்தித்துறையில் எற்பட்ட மாணவர்களின் மறியல் போராட்டம் மற்றும் புலிகள் மீதான தடை நீக்கம் ஆகியவை தொடர்பாகவே தினேஷ் குணவர்த்தனா பிரேரணை கொண்டுவந்திருந்தார்.

பிரேரணைக்கு ஆதவரவாக

(10ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் நாளை அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாளை வெள்ளிக்கிழமை அமெரிக்விற்கு பயணமாகவுள்ளார்.

அமெரிக்கா செல்லும் பிரதமர் அங்கு ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# காயமடைந்த விடுதலைப்புலி உறுப்பினரை பாதுகாப்பு அமைச்சர் பார்வையிட்டார்

## பாராளுமன்றில் தினேஷ் சர்ச்சை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் குருநாகலில் இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்த நிலையில் கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார். இவ்வாறு தினேஷ் குணவர்த்தனா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக தினேஷ் குணவரத்தனா மேலும் தெரிவிக்கையில்:

அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரை பார்வை

(10ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் இழுபறிநிலை

## கிழக்கில் மட்டும் நடத்த முயற்சி

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சிகளுக்கான தேர்தல் இம் மாதம் 25ம் திகதி நடைபெறுமா என்பதில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்க்கட்சிக்கூட்டமைப்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து அதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூட்டமைப்பினரிடம் உறுதி அளித்துள்ள நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தேர்தலை நடத்துமாறு பிடிவாதமாகவுள்ளார்.

இந்நிலையில் தேர்தலுக்கான ஆயத்த வேலைகளைத் தேர்தல் திணைக்களம் செய்து வருகின்ற

(10ம் பக்கம் பார்க்க)

## தனியார் மயப்படுத்தலை எதிர்த்து

# வங்கி ஊழியர்கள் இன்று வெளிநடப்புச் செய்வர்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்த்து இன்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நாடாளவிய ரீதியில் எதிர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இன்று பிற்பகல் 3.15 மணியளவில் சங்க உறுப்பினர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறி தமது வங்கிக்கிளைக்கு முன்பாக நின்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவர்

இதேவேளை யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் கடமையாற்றும் சங்க உறுப்பினர்களும் அலுவலக வெளிநடப்புப் பேராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். எனினும் இன்றைய வங்கிக் கொடுப்பனவுகள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாதென சங்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


**(O/L) கணிதம்-2002**

37வருட அனுபவமுடைய ஆசிரியரினால் O Lக்கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் பெரும்பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண்கணிதம் புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 20அல்லது40 நாட்களில் தொடர் 40மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும் சந்திக்கும் நேரம் காலை8-00 9.00வரை க.ஆறுமுகநாதன் இல 10, கச்சேரி கிழக்குஒழுங்கை, சுண்டுக்குளி

(5894)


# 19வது அரசியலமைப்புத் திருத்தம்

# பொ.ஐ.மு.எம்.பிக்கள் ஆதரவென

# அரசு பொய்ப்பிரசாரம் செய்கிறது

## மங்களசமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

19வது அரசியலமைப் புத்திருத்தத்திற்கு பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆதரவளிக்கவுள்ளனர் என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிதெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அறிக்கை ஒன்றைவிடுத்துள்ளார்.

19வது அரசியலமைப்புத் திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றப்படாமல் தடுப்பதற்கு கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்,

அதேவேளை ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு இல்லை என்பது நடந்துமுடிந்த சமாதானப் பேரணிமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது-

இந்தநிலையில் 19வது அரசியலமைப்புத் திருத்தத்திற்குப் பொதுஜன ஐக்கியமுன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆதரவளிக்கவுள்ளனர் என்றுஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொய்ப்பிரசாரம் மேற்கொண்டுள்ளது என்றுமங்கள சமரவீரவிடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா உலகளாவிய இரத்ததான தினமாகப் பிரகடனம் செய்துள்ளார்.

இந்த அடிப்படையில் அன்றையதினம் திருநெல்வேலி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

(உ)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் எஸ் சிவபாலனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று பிற்பகல் யாழ் மாநகர சபை முதல்வர் எஸ்.கந்தையன் தலைமையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (த-19)

## முருங்கனில் வீதிமறிப்பு போராட்டம்

(மன்னார்)

கட்டுக்கரைக் குளக்கட்டு புனரமைப்பிற்கு அரசு தாமதம் செய்வது, முருங்கன் நகரில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதனால் இயல்பு வாழ்க்கை பாதிப்படைவதைக் கண்டித்தும் வீதிகள் திருத்தப்படாமையைக் கண்டித்தும் நேற்று முன்தினம் சுமார் 500க்கு மேற்பட்ட மக்கள் வீதிமறிப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இப்போராட்டத்தில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், உட்பட உள்ளூர் பிரமுகர்கள் மதகுருமார்கள் பலரும் கலந்து கொண்டார்கள். (ம)

## சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இராணுவ முகாம் காவலரண்களுக்கு சேதமேற்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்கள் நண்பகல் பருத்தித்துறை நீதிவான் அ. பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யபபட்டனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த பி. உதயசீலன் (வயது-29) எஸ். விக்கினராஜா (வயது-48) ஆகிய இருவருமே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களாவார்கள்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹப்பு ஆராய்ச்சி புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ம)

## பணியாளர் 17 பேருக்குத் திடீர் சுகவீனம

(கொழும்பு)

மஸ்கெலிய விலுள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் 17 பேர் திடீர் சுகவீனம காரணமாக மஸ்கெலியா பொதுவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் உணவருந்திய பின்னர் இப17 மணியாளர்களுக்கும் வாந்தி மற்றும் வயிற்றோட்டம போன்றன ஏற்பட்டதன் காரணமாகவே வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து மஸ்கெலியா பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் இரத்மலானைப்பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையின் சிற்றுண்டிச் சாலையில் உணவருந்திய 160 பணியாளர்களுக்கும் இவ்வாறான தொரு நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

(உ-8

## 8 மாத குழந்தைக்கு வாந்திபேதி

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்ட 8 மாதக் குழந்தை ஒன்று யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் சங்கித் என்ற குழந்தையே யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது (த-6)

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் லொறி சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவி உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கொக்குவிலைச்சேர்ந்த பா.லக்ஷனா (வயது-8) ர.ரவீந்திரன் (வயது-37)ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்

இவர்கள் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-6)

# புலிகள் அமைப்பில்இணையமுன்வந்த

# 85சிறுவர்கள் மீளவும் ஒப்படைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இயக்கத்தில் இணைய முன்வந்த 85 சிறுவர்களை அவர்களின் உறவினர்களிடம் மீள ஒப்படைத்துள்ளதாக யுனிசெவ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட 85 சிறுவர்களினதும் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் யுனிசெவ் பிரதிநிதி டெட் ஜெய்பனிடம் கிளிநொச்சியில் வைத்து கடந்த 6ந் திகதி ஒப்படைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் இவ்வாறான செயல்கள் அவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளதாகவும், அதேவேளை மீளவும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களை யுனிசெவ் பிரதிநிதிகள் சந்தித்து வருவதாகவும் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

சரசாலைப் பகுதியில் மோட்டார்சைக்கிலும்சைக்கிலும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர்ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த க.பிரபாகரன் (வயது19)என்ற இளைஞனே காயமடைந்தவராவர் அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(த-6)

## இயக்கத்தில் இணையச்சென்ற மூன்று சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைவதற்கு சென்ற மூன்று சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கெங்கேஸ்வரன் பிரதீபன் (8ம் வட்டாரம் புங்குடுதீவு) காசன் சஞ்சிவன் (கரம்பன் ஊர்காவற்றுறை) தர்மதேவன் அருந்தவராசா (வேலணைத்துறை) ஆகிய மூன்று சிறுவர்களுமே அவர்களது பெற்றோர்களிடம் தீவகப் பொறுப்பாளர் செம்மணினால் ஒப்படைக்கப்பட்டனர்.

(ம)

## அரச ஊழியர்கள் கடமையே கண்ணாக செயற்பட வேண்டும் அமைச்சர் லொக்கு பண்டார

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு அரசு ஆட்சியமைத்தாலும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் தமது கடமையில் கண்ணாக இருக்க வேண்டும் என்று நீதி சட்டச் சீரமைப்பு இன ஒருமைப்பாட்டு புத்த சாசன அமைச்சர் வி.ஐ.மு. லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்

பதுளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரச ஊழியர்களின் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்:-

அரசாங்க ஊழியர்கள் அனைவரும் அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கு இடமளியாது தங்களது கடமையை நேர்மையாக செய்ய வேண்டும் என்றும் அரசியல் தலைவர்களைப்போல் நடக்கக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தாய்லாந்து நோக்கி பத்திரிகையாளர் விரைவு

இம்மாதம் 16ந்திகதி திங்கட்கிழமை முதல் 18ந்திகதி புதன்கிழமைவரை தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து வெளிநாட்டு உள்நாட்டுப் பத்திரிகையாளர் படப்பிடிப்பாளர்கள் தாய்லாந்துக்குப் படையெடுத்துள்ளனர்.

இதேவேளை வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் இருந்து தாய்லாந்தில்கூடும் பெருந்திரளான பத்திரிகையாளர்கள் பேச்சுவார்த்தையை ஒட்டி 16ந்திகதி நடைபெறவுள்ள ஆரம்பநிகழ்வுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்கள் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பநிகழ்வுகளை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நேரடியாக ஒளிபரப்பும்.

(ம)

## தியாகி திலீபனின் நினைவுகள்

உலக வரலாற்றில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் சந்தித்திராத மிகப்பெரிய சோதனைகளையும் வேதனைகளையும் தமிழீழ விடுதலைப்போராட்டம்சுமந்து வருகின்றது ஆனாலும் விடுதலைப்புலிகளின் உறுதியாலும்அளவிட முடியாத அர்ப்பணிப்புகளாலும் தமிழீழ விடுதலைப்போராட்டம் உலகிற்கெல்லாம் வழிகாட்டி நிற்கின்றது எமது போராட்டப் பயணத்தில் இந்திய ஆக்கிரமிப்பு என்பது மிக ஆபத்தானது. அதை வெற்றி கொண்டதோ அதைவிட சரித்திர சாதனையும் ஆனது.

### ஆக்கிரமிப்பாளர்களின் முதல் ஆயுதம்

ஒரு நாட்டையோ அல்லது அதன் வளங்களையோ அபகரிக்க நினைக்கும் எந்த ஒரு ஆக்கிரமிப்பாளர்களும் முதலில் அந்த நாட்டின் விரோதிகளை, சுயநலவாதிகளை இனங்கண்டு தம்பக்கம் இழுத்துக் கொள்வது வழக்கம். இது கட்டப்பொம்மன் காலத்தே தொட்டு இன்றும் தொடர்கிறது.

இந்தியா தன் பிராந்திய நலனுக்காகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு பகடைக்காயாகப் பாவிக்கத் தலைப்பட்டது. தமிழீழப்போராளிகள் என்ற போர்வையில் தெரிந்த போலிகளை தன் கைக்கூலிகளாக்கியதோடு புதிய புதிய போலி இயக்கங்களை உருவாக்கிக் கொண்டு தன் ஆசை வலைக்குள் அகப்படாத தன் ஆளுமைக்குப் பணியாத விடுதலைப் புலிகள் மீது வேட்டையாட விட்டது.

நீதியும், நேர்மையும் தர்மமும் தமிழீழ மக்களின் ஆதரவும் எமக்குத்துணை நிற்பதால் போலிகளின் திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாயின. இதனால் சுதந்திரம் அடைந்த இந்தியா தனது நேரடி அரசியல் இராணுவ அழுத்தங்களை விடுதலைப் புலிகள் மீது திணித்தது.

# விபத்து சத்திரசிகிச்சைப் பிரிவின்மையால்

# வீண் உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன

## உலக வங்கி தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் விபத்து சத்திரசிகிச்சைப் பிரிவு இல்லாமையினால் விபத்துக்களில் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு யாழ். வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு அருகில் விபத்து சத்திரசிகிச்சைப்பிரிவு ஒன்றினை அமைப்பதற்கு உலக வங்கி உதவி வழங்க வேண்டும்.

யாழ். பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஸ்ரீ பத்மநாதன் உலகவங்கி தூதுக்குழுவினரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தூதுக்குழுவினரிடம் இதுபற்றித் தெரிவிக்கையில்;

இலங்கையிலுள்ள ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளில் விபத்து சத்திரசிகிச்சை பிரிவு இயங்கி வருகின்றது ஆனால் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இத்தகைய வசதிகள் இல்லாமல் இருக்கின்றது.

விபத்துக்களில் சிக்கி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுபவர்கள் சத்திரசிகிச்சை அறைக்குக் கொண்டு செல்லப்படும் முன்னரே இறந்துவிடக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன இவ் உத்தேச பிரிவு அமைக்கப்படுமாயின் அநியாயமான உயிரிழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார் அத்துடன், குறித்த திட்டத்துக்கு 78 மில்லியன் ரூபா தேவையெனவும் குறிப்பிட்டார்.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மட்டும் 150 தாதியர்களுக்கான வெற்றிடங்கள் இருந்து வருவதாகவும், குடாநாட்டில் 254 மருத்துவ மாதர்களுக்கு வெற்றிடம் நிலவி வருவதாகவும் எடுத்துக் கூறினார்.

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகள் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

(உ-77)

## வர்த்தகரைத் தாக்கிய பொலிஸார் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தைப்பகுதியில் கடந்த சனியன்று வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விரைவில் இடம்பெறவுள்ளதாக விசாரணை அதிகாரி றுவான் சந்திரசேகர தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாருக்கு விசாரணையின் பொருட்டு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(உ-6)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உளத் தூய்மையுடன் பணியாற்றுகின்றது

## யாழ். அலுவலகத்திறப்பு விழாவில் மேலதிக அரசாங்க அதிபர்

(தென்மராட்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமிழ் மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் நீக்குவதற்காக உளத் தூய்மையுடன் பணியாற்றுகின்றது.

தமிழ்மக்களுடையவாழ்வை வளம்படுத்த வேண்டும்என்ற ஒரேயொரு நோக்கத்துடன் செயல்படுபவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்பலஉண்டு. இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் நேற்றுமுன்தினம் கொக்குவிலில்அமைக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனையைத் திறந்து வைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின யாழ் மாவட்டப் பொறுப்பாளர்நீ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மிதிவெடிகள் அகற்றும் நிறுவனமாகிய மக்கின செயல் திட்டப் பணிப்பாளர் மக்டொனால்ட் டொன், என்.பீ.ஏ நிறுவனத்தின் பணிப்பாளர் லூக்அல்கின்சன்ஸ், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி உட்பட வேறும் பலர் சமுகமளித்திருந்தனர்.

கழகத்தின் பெயர்ப்பலகையை 'என்பீஏ' நிறுவனத்தின் பணிப்பாளர் லூக் அல்கின்சன்ஸ் திறந்து வைத்தார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசஅதிபர்அங்குதொடர்ந்து பேசுகையில்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில பணிபுரிந்தவர்கள தியாக உணர்வுடன் செயலாற்றுபவர்கள். இன்றைய அரசியல் சூழ்நிலை மாற்றத்தினைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டினை எவ்வாறு மீளமைத்து இயல்பு நிலைக்குக் கொண்டுவரலாம் எனச் சிந்திக்க வேண்டும்.

இன்று உலக வங்கியின் நிதி உதவியுடன் 'நியாப்' "நிக்கோட்" போன்ற திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. நாம மீண்டும் வாழ வேண்டும். என்ன நோக்கத்திற்காக எமது மக்கள் தம் முயிரை இழந்தார்களோ அவர்களது இலட்சியங்கள் நிறைவேற நாம் பாடுபட வேண்டும்.

இப்போது குடாநாட்டில் பயன்தரும் மரங்கள் தறிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. இப்படி நாம் செய்வது சரிதானா எனச் சிந்திக்க வேண்டும். எமது சமுதாயத்தின் நீண்டகாலக் கனவை நனவாக்கி சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் பணிபுரிய வேண்டிய காலகட்டமிதுவாகும்.

எம்முன்னே பாரிய பொறுப்புக்களும், கடமைகளும் உள்ளன. ஆகவே மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அதன் செயற்பாடுகளை முன்புபோல முன்னெடுத்து மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி அங்கு உரையாற்றும் போது;

கடந்த ஆறு வருடங்களாக குடாநாட்டில் நாம் எமது பணிகளைச் செய்ய முடியாத சூழ்நிலை நிலவியது. நாம் இங்கு பணிசெய்ய சந்திரிக்கா அரசிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்த போதிலும் கூட எமக்கான அனுமதி மறுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் ஒரு சில இடங்களில் நாம் எமது பணிகளைச் செய்தோம்

இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற சமாதானச் சூழல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை அது என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடையும் பொருட்டு அனைத்துப் பகுதிகளிலும் வேலை செய்வதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளது.

தற்போது நாட்டை ஆளுகின்ற அரசாங்கம் எங்களை வடக்கு-கிழக்கின் தேசிய அரச சார்பற்ற நிறுவனமாக அங்கீகரித்து மீண்டும் பதிவு செய்து, இலங்கையில் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தேசிய மட்டத்தில் எம்மை ஒரு அங்கத்தவராக்கியுள்ளது.

அத்துடன் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் அதிகார சபையிலும் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினை ஒரு அங்கமாக்கியுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அதனைவளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்லும்.

இக்கழகத்தின் கிளைகள் உலகின் 18 நாடுகளில்இயங்கி வருகின்றன. இவர்களது தொடர்ச்சியானநிதி ஆதாரத்தின் மூலம் தான் நாம் எமது மக்களை கஷ்டமான காலத்தில் இருந்து காப்பாற்றி வந்துள்ளோம். எமது மக்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்தவகையில்எம்பணிகளைநாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் மேற்கொள்வோம். அதே நேரம் எமது மக்களுக்கு உதவுவதற்காக பல நிதி முகவர் அமைப்புகள இப்போது முன்வந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர் அ. விநாயகமூர்த்தியும் பங்கு கொண்டிருந்தார்.

(உ-77)

## சமாதானப் பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனங்கள் இணைந்து யாழ். மறைக் கல்வி நடு நிலையத்தில் நடத்திய சமாதானப் பேச்சுப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

பிரிவு- I

முதலாம் இடம்-க. உஷாந்தன், இரண்டாம் இடம்- சி. சுமிதா, மூன்றாம் இடம் ச. ஜஸ்மிலா.

பிரிவு-II

முதலாம் இடம்அருணியன், இரண்டாம் இடம் அனுசியா, மூன்றாம் இடம்- போ.றினோசா.

பிரிவு-III

முதலாம் இடம்-ஜி.டிலானி பவித்திரா, இரண்டாம் இடம்- கே சுகாஸ், மூன்றாம் இடம்-கி பகிதானியா.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், சான்றிதழ் வழங்கலும் விரைவில் கியூடெக் யாழ் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

(உ-6)

## குடாநாட்டில் கூகைக்கட்டு நோய் பரவுகிறது

(கல்வயல்)

யாழ். குடாநாட்டில் தற்போது தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

அதிகரித்த வெப்பம் மற்றும் வீசுகின்ற காற்று காரணமாகவே இந் நோய்கள் வேகமாகப் பரவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காய்ச்சல், கண் நோய், கூகைக்கட்டு, சின்னமுத்து போன்ற நோய்களே தற்போது பரவி வருவது குறிப்பிடத்தக்கது (உ-111)

## சமாதானப் பாலம் 50 பேர் கொண்ட குழு தென்பகுதி பயணம்

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பாலம்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கியூடெக் சமாதானக் குழுவினர் 50 பேர் எதிர் வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென் பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

அனுராதபுரம், பொலநறுவை, கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் இக்குழு அப்பகுதி மக்களின் வீடுகளில தங்கி சமாதான உறவுகளை வலுவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

(உ-6)

## போலி நகைகளை அடகு வைத்து மோசடி

(கொழும்பு)

போலி நகைகளை வங்கியில் அடகுவைத்து 33 இலட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்றுக் கொண்ட நகைக்கடைஉரிமையாளரையும் அவருக்கு உடந்தையாக இருந்த வங்கி அதிகாரியையும் மூன்றரை மாதங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நகைக்கடைஉரிமையாளர் ஜா-எல மக்கள்வங்கிக் கிளையில் போலி நகைகளை அடகுவைத்துசுமார்ஒருவருடகாலமாக இந்த மோசடியை புரிந்து வந்துள்ளார்.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள் ஏலத்தில் விற்பதற்காக பரீட்சித்த போதே சந்தேக நபரால் அடகு வைக்கப்பட்ட நகைகள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டது.

(உ-3)

## வாக்குமூலம் பதிவு

(யாழ்ப்பாணம்)

கடந்தமாதம் 16ந்திகதி நாரந்தனையிலுள்ள கள்ளுத் தவறணையினுள் புகுந்து கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் யாழ் மனிதவுரிமை ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

இவ்விசாரணையில் நாரந்தனை கடற்படைக்கட்டளை அதிகாரியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(த-6)

## கம்பர்மலையில் நிகழ்ந்த உலக சாதனை

(யாழ்ப்பாணம்)

இந்துமத மறுமலர்ச்சி ஆதீனமுதல்வரும் உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவர் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ அழகுஜெகதீஸ்வர தேசிகர் இரவு 7.00 மணி தொடக்கம்அதிகாலை 3மணி வரை தொடர்ச்சியாக 8 மணித்தியாலங்கள் மகாபாரதம் எனும் பொருளில் சொற்பொழிவாற்றி உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இச்சாதனை இந்துமத குருமார் ஒன்றியத்தலைவர் பஞ்மனோகரக் குருக்கள் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர்உட்பட நூற்றுக்கணக்கான மக்களின் முன்னிலையில் கடந்த வெள்ளியன்று கம்பர்மலை பெரியதம்பிரான் ஆலயத்தில் நிகழ்த்தப்பட்டது.

கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் நாலரை மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பேசியதே இதுவரையும் உலக சாதனையாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பேசும் கலையில் உலகசாதனை படைக்க சோக்கெல்லோ சண்முகம் திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## கிளிநொச்சி கலைஞர்கள் சமாதானபயணம்

கிளிநொச்சி அழகியல் கலாமன்றக் கலைஞர்கள் 40 பேர் தென்னிலங்கைக்கு சமாதானப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

இவர்களுக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய கலைஅரங்கில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

(உ)

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் அமெரிக்காவுடன் கைகோர்ப்போம்

பாக். ஜனாதிபதி முஷாரப் உறுதிமொழி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பாகிஸ்தான் முழு ஆதரவையும் வழங்கும்.

மதவாதிகள் தலைதூக்க எச்சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப்படமாட்டார்கள்.

பாகிஸ்தானிய ஜனாதிபதி பெர்வேஸ முஷாரப் அமெரிக்காவில் ஹாவார்ட் பலகலைக்கழகத்தில் மாணவர் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்திக் கூறுகையில்

பாகிஸ்தானை மிதவாத நாடாக கட்டி எழுப்ப வேண்டும். ஜனநாயகத்தை அங்கு நிலை நாட்டப்பாடுபடவேண்டும்.

இந்தியாவின் நட்பையே பாகிஸ்தான் விரும்புகிறது. போரை அல்ல. ஆனால் இந்தியாவோ அந்த உறவை மிகவும் கீழ்மட்டத்திலேயே வைத்துள்ளது என்று குறிப்பிட்டார். (உ)

# ஜம்முவில் தீவிரவாதிகளின தாக்குதல்கள் அதிகரிப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் முதற்கட்ட தேர்தல் நெருங்கிவரும் வேளையில் பயங்கரவாதிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் முதலமைச்சர் பரூக் அப்துல்லா்வன் இளைய சகோதரனான டாக்டர் முஸ்தப்பாகமல் உட்பட 3 வேட்பாளர்களை இலக்கு வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொராட்எட்ட என்ற இடத்தில் தேசிய மாநாட்டுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொலிசார் ஒருவர் பலியானதுடன் இருவர் காயம் அடைந்துள்ளனர். (உ-7)

## ஆன்மீகத் தலைவர்

# தலாய்லாமாவின் பிரதிநிதிகள் சீனாவில்

(பீக்கிங்)

நாடு கடத்தப்பட்ட திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவின் நம்பிக்கைக்குரிய உயர்மட்டப் பிரதிநிதிகள் சீனத் தலைநகர் பீக்கிங்கில் அந்நாட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நான்கு ஆண்டுகளின் பின்னர் இரு தரப்புக்களும் சந்தித்திருப்பதானது ஆன்மீகத் தலைவர் விடயத்தில் சீனா நல்லதொரு முடிவை எடுக்க ஏதுவாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இதேவேளை மேற்படி பிரதிநிதிகள் சீனாவில் சில நாட்கள் தங்கியிருந்து மேலும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)




# ஐக்கிய நாடுகள் சபையில் சுவிஸ் இணைந்தது

(பேண்)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 190 ஆவது உறுப்பு நாடாக சுவிஸ்லாந்து இணைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நடாக சுவிஸ் தெரிவு செய்யப்பட்டதையடுத்து, உலகின் வறுமையை ஒழிப்பதற்கும், மனித உரிமைகளை பேணுவதற்கும், சமாதானத்தை வலியுறுத்துவதற்கும் பாடுபடவேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு சுவிஸ்லாந்திடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பின் 191ஆவது நாடாக கிழக்குத்திமோர் நேற்று முன்தினம் முதல் இணைந்து கொண்டுள்ளதும குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தமிழில் பூஜை நடத்த அர்ச்சகர் சங்கம் மறுப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் கஜ ஊர் அருகே திருமுக்கோடரூரில் உள்ள அகத்தீஸ்வரர் கோயிலில் தமிழில் பூஜை நடத்துவதா அல்லது ஆகம முறைப்படி சமஸ்கிரதத்தில் பூஜை நடத்துவதா என பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

ஆகம முறைப்படி அமைககப்பட்ட இக்கோயிலில் ஆகம முறைப்படியே பூஜை நடைபெற வேண்டும் என தமிழ் நாட்டு அர்ச்சகர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கோயிலை நிர்மாணம் செய்தவர்களும் ஊர்க்குடிமக்களும் தமிழிழ் பூஜை செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

அரசாங்கம் இதற்கு எந்த முடிவையும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# 5 கோடி செலவில் கிளிங்டன் மகள் திருமணம்

(வாஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிங்டன் தனது மகளுக்கு ஐந்து கோடி ரூபா செலவில் திருமணத்தை நடத்த திட்டமிட்டுள்ளார்.

திருமணம் சென்பிரான்ஸிஸ்கோ நகருக்கு வடக்கே 50 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள போலினாஸ் என்ற சிறிய தீவில் எதிர்வரும் 2003ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. (உ-3)

# சீனாவில கடும்சூறாவளி

(பீக்கிங்)

சீனாவில் தென்கிழக்கு கரையோரப் பகுதியில் வீசிய சூறாவளியினால் 9 பேர் கொல்லப்பட்டனர். 3 பேரைக் காணவில்லை.

இங்கு கடுங்காற்றுடன் கூடிய பெருமழை தொடர்ச்சியாகப் பெய்து வருகிறது. (உ)

# பணயக் கைதிகள் 10 பேர் விடுதலை

(பொகோரா)

கொலம்பியாவில் இயங்கிவரும் தேசிய விடுதலை இராணுவம் என்னும் பயங்கரவாத அமைப்பு தன்வசமிருந்த பணயக் கைதிகளில் 10 பேரை கடந்த ஞாயிறன்று விடுவித்துள்ளது

கடந்த மாதம் சிறைப்பிடிக்கப்பட்ட 27 பேரிலேயே இந்தப் 10 பேருமள விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களை அடுத்தவாரம் விடுவிக்கவுள்ளதாக அவ் அமைப்பு அறிவித்துள்ளது. (உ)

# இஸ்ரேல்பிரதமர் கண்டனம்

(காஸா)

யசீர் அரபாத்தின தலைமையிலுள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்பு பயங்கரவாதத்தை தோற்றுவிக்கிறது.

பலஸ்தீனம், இஸ்ரேலுடன் மேற்கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையைப் பாதுகாப்பதில் தோற்றுப் போய்விட்டது என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியலஷரோன் தெரிவித்துள்ளார்.

# விண்வெளி ரொக்கெட் ஏவப்பட்டது

(டோக்கியோ)

நெடுங்காலமாக எதிர்பார்த்து வந்த மூன்றாம் தலைமுறை விண்வெளி ரொக்கெட் நேற்று முன்தினம் டோக்கியோவற்கு தொலைவில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

"எச் 2 ஏ" என்ற இவ் ரொக்கெட் புவியின் சுற்றுப் பாதையில் வெறறகரமாக சென்றுள்ளதா என்பது இன்னமும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. (உ-7)

# ஐ.நா.வின் அனுமதியின்றி தாக்குதல் நடத்த கூடாது

பிறேசில் எச்சரிக்கை

(பிறேசிலியா)

ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியின்றி ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல எதனையும் தொடுக்க கூடாது என பிறேசில நாட்டு ஜனாதிபதி கண்டிப்பாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா தொடுப்பதற்கு போதிய காரணங்கள் காட்டப்படும் பட்சத்திலேயே அங்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரிட்டிஷ் தவிர அனேக சர்வதேச நாடுகள் ஈராக் மீதான தாக்குதல் குறித்த அமெரிக்காவின் திட்டத்துக்கு கண்டனங்களையும் எதிர்ப்புகளையும் நாளாந்தம் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஈராக் பாதுகாப்பு கட்டுப்பாட்டு இலக்குமீது அமெ.விமானங்கள் தாக்கு

(பகதாத)

ஈராக்கின் தென்பகுதியிலுள்ள வான் சூனிய வெளிப் பிரதேசத்திலுள்ள பாதுகாப்பு கட்டுப்பாட்டு இலக்கொன்றின் மீது அமெரிக்க விமானங்கள் கடந்த திங்கட்கிழமை மற்றோர் தாக்குதலை நடத்தியுள்ளன.

ஈராக்கின் வடக்கு மற்றும் தெறகிலுள்ள வான் சூனிய பிரதேசத்தில உள்ள பாதுகாப்பு நிலைகள்மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய 37ஆவது தாக்குதல் இதுவென அமெரிக்க பாதுகாப்பு தலைமையகம தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட அமெரிக்க விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மேற்கு ஈராக்கில் உள்ள வான் பாதுகாப்பு தலைமையகத்தை இலக்கு வைத்து கடந்த சனிக்கிழமை அமெரிக்க மற்றும் பிரிட்டனுக்குச் சொந்தமான 100க்கும் அதிகமான விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டதும் தெரிந்ததே. (உ-8)



நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் பீ.டப்ளியூ .டி.சி.ஜெயதிலகா அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டபோது, மல்லாகம் மாவட்ட நிதிபதி பா.சுப்பிரமணியம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கர், இரத்தினபுரி மேல்நீதி மன்ற நிதிபதி நளின் பெரேரா, நீதிச் சேவை ஆணைக் குழுச் செயலாளர் பீ.டப்ளியூ.டி.சி. ஜெயதிலகா, யாழ்ப் பாணம மேல்நீதி மன்ற நிதிபதி கே.பீ.எஸ்.வரதராசா, யாழ்ப்பாணம் மேலதிகமாவட்ட நீதிபதி திருமதி.சரோஜினிதேவி இளங்கோவன் ஆகியோருடன் யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உரையாடுவதையும், நீதிச் சேவைஆணைக் குழுச்செயலாளர் பீ.டபிள்யூ.டி.சி ஜெயதிலக்க உரையாற்றுவதையும், யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் படங்களில் காணலாம்.




கலைஞர் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களை யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள கொண்டலடிப்பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வருவதையும், யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவின் போது மேடையில் முறையே சொல்லின் செல்வர் ஆறுதிருமுருகன், விசேடஆணையாளர் க. குணராசா (செங்கை ஆழியான்), யாழ். மாநகரசபை நகரபிதா செ.கந்தையன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை. விழாநாயகன் செல்லையா மெற்றாஸ்மயில், பேராசிரியர் அ.சண்முகதாஸ், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய பங்குத்தந்தை பீ.எம்.இம்மானுவேல் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி. பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், யாழ். இந்துக் கல்லூரி உபஅதிபர் திரு. பொ.மகேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலைஞருக்கு, நல்லை ஆதீனமுதல்வர் "துங்கக்கிரீடம" சூட்டிக் கௌரவிப்பதையும் முதல், இரண்டு மூன்றாம படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## ஆதிக்கவிஞர் வால்மீகி

முன்னொரு காலத்தில் ரதனாகரன் என்ற ஓர் அந்தணன் சகவாசதோஷத்தினால் திருடன் ஆகிவிட்டான். காட்டில் அவன் ஒற்றையடிப் பாதையில் ஒளிந்து கொண்டு நிற்பான். அந்த வழியாக யாராவது யாத்திரிகர் வந்தால் அவர்கள்மீது பாய்ந்து அவர்களைக் கொல்வான். பிறகு அவர்களிடமுள்ள பொருள்களைக் களவாடி அவர்களின் உடலை அப்பால் தூக்கி எறிவான். இதுமாதிரி அவன் கொன்றது எத்தனையோ நூற்றுக்கணக்கான பேர்களை.

ஒரு தடவை தேவரிஷி நாரதர் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் ரத்னாகரன் அவர் மீது பாய்ந்து தன் கையிலிருந்த கத்தியை உருவினான். 'நீ எதற்காக அப்பா என்னைக் கொல்ல வருகின்றாய்? நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்?' என்றார் நாரதர். நீங்கள் எனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை ஆனால் உங்களைக் கொன்று உங்கள் உடைமைகளை எடுத்துக்கொள்வேன்' என்றான். மனிதர்களைக் கொல்லாமல் காய் கிழங்குகளை உண்டு நீ வாழ்க்கை நடத்த முடியாதா? 'அப்பா, நீ யாருக்காக இப்படி மனிதர்களைக் கொல்லும் பாவத்தைச் செய்கிறாயோ, அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்ளப் போகிறார்களா? உன் பாவத்தை நீ தான் அனுபவிக்க வேண்டும் தெரிந்ததா?'' என்றார் நாரதர்.

'இது என்ன அநியாயமாகும்? என் பாவத்தினால் கிடைக்கும் பொருளைக் கொண்டு யார் வாழ்க்கை நடத்துகிறார்களோ அவர்கள் என் பாவத்தில் ஒரு பங்கை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்?' என்றான் அவன். 'அப்படி இல்லை அப்பா! உன் பாவத்தில் யாரும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். உனக்குச் சந்தேகமாயிருந்தால் நான் இங்கேயே நிற்கிறேன், நீ வீட்டிற்குப்போய் கேட்டுவிட்டு வா' என்றார் நாரதர். 'ஐயா! பெரியவரே! என்னை என்ன மடையன் என்று நினைத்துக் கொண்டீர்களா? என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டு நீங்கள் ஓடிப்போய் விடலாம் என்று பார்த்தீர்களா? என்றான் அவன். 'நான் எங்கும் ஓடிப்போக மாட்டேன், ஆனால் உனக்கு இந்தச் சந்தேகமே வேண்டாம். நீ என்னை இந்த மரத்தோடு கட்டிப் போட்டுவிட்டு உன் வீட்டிற்குச் செல்' என்று சொல்லிவிட்டு நாரதர் மரத்தின் அருகில் போய் மரத்தோடு மரமாக நின்றார். ரத்னாகரன் அவரைக் காட்டுக் கொடியினால் மரத்தோடு கட்டினான். கட்டிவிட்டு நேரே வீட்டை நோக்கி ஓடினான். 'அப்பா, நான் தினமும் பாவமான கொலைத் தொழில் புரிந்து தான் உங்களையெல்லாம் காப்பாற்றி வருகிறேன். அந்தப்பாவத்தில் உங்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா? என்று கேட்டான், தகப்பனார்சற்று யோசித்தார். பிறகு சொன்னார். 'பிள்ளாய்! நாங்கள் உன்னை வளர்த்துப் பெரியவனாக்கினோம் இப்பொழுது எங்களுக்கு மூப்பு வந்து விட்டது நாங்கள் உன்னைக் காப்பாற்றியது போல, இப்பொழுது எங்களைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை. அதற்கு வேண்டிய பணத்தை நீ எப்படிச் சம்பாதிக்கிறாய் என்பது பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆகவே உன்பாவத்திலோ புண்ணியத்திலோ எங்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது' என்றார்.

ரத்னகரன் இந்தப் பதிலைக் கேட்டுச் சற்று அயர்ந்தான். பிறகு தாயாரிடம் இதே கேள்வியைக்கேட்டான் தகப்பனார் சொல்லிய பதிலையே அவளும்சொன்னாள். ரத்னாகரன் மனைவியிடம் இதே கேள்வியைக்கேட்டான் அவள் சொன்னாள் 'மனைவியைக் காப்பாற்றவேண்டியது கணவனின்கடமை. அந்தக்கடமையை நிறைவேற்ற நீங்கள் எப்படிப் பொருள் சம்பாதிக்கிறீர்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலைகிடையாது ஆகவே உங்கள் பாவத்தில் எனக்கு எப்படிப்பங்கு கிடைக்கும்?' என்று.

கடைசியில் தன் மகனையும் இதேகேள்வியைக் கேட்டான் அதற்கு மகன்'அப்பா, நான் இப்பொழுது சிறுவன் தாங்கள் என்னைக் காப்பாற்றி வருகிறீர்கள் நாளைக்கு நான் பெரியவனானதும் நான் உங்களைக் காப்பாற்ற ஆரம்பிப்பேன். அவ்வளவுதான் எனக்குத்தெரியும். ஆகவே உங்கள் பாவத்தில் என்னால் எப்படிப் பங்கேற்றுக்கொள்ள முடியும்?' என்று சொன்னான். இவர்கள் சொன்ன பதில்களைக்கேட்ட பிறகுதான் ரத்னாகரனுக்கு ஞானோதயம் பிறந்தது. நாரதனரக்கட்டிப்போட்டிருந்த இடத்துக்கு ஓடினான் அவரை விடுவித்து அவர் காலில்விழுந்து கதறி அழுதான்.

என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் இது வரையில் எத்தனையோ பாவ காரியங்களைச் செய்திருக்கிறேன். இருந்தும் அவர்களில் ஒருவராவது என் பாவத்தில் பங்கு கொள்ள மாட்டேன் என்கிறார்களே, சுவாமி! நீங்கள் தான் என் பாவங்களுக்கு ஒரு பிராயச் சித்தம் சொல்ல வேண்டும் என்று கேட்டான் ''நல்லோரைக்காண்பதுவும் நன்றே'' என்று சொல்வார்கள். அது ரத்னாகரன் விஷயத்தில் மிகவும் உண்மையாகி விட்டது. இத்தனை நாளும் தான் செய்தது தவறு என்று உணர ஆரம்பித்து விட்டான்.

நாரதர் அவருக்கு ஒரு பிராயச் சித்தம் சொல்லிக் கொடுத்தார். ராம நாமம் ஜெபிக்கச் சொன்னார். ஆனால் அவனால் ''ராம'' என்ற நாமத்தைச் சரியாகச் சொல்ல முடியவில்லை எனவே நாரதர் தான் கட்டப்பட்டிருந்த மரத்தின் பெயரான மராவை 'மரா' என்று ஜெபிக்கும்படி சொன்னார் அவ்வளவுதான், ரத்தினாகரன் அங்கேயே உட்கார்ந்து, மரா, மரா என்று ஜபம் செய்யத் தொடங்கினான். நாளடைவில் அது 'ராம, ராம' என்று மாறிற்று. வருஷங்கள் சென்றன ஆனால் ரத்னாகரன் அங்கேயே உட்கார்ந்து தன்னை மறந்து 'ராம ஜபம்' செய்து கொண்டேயிருந்தான். அவனைச் சுற்றி புற்று உண்டாகி விட்டது.

அவர் தவத்தை மெச்சிப் பிரம்மா, ஒரு நாள் அவர் முன் தோன்றி, அவரை வெளியே வரும்படி அழைத்தார். வெளியே வந்தவர் பழைய ரத்னாகரன் அல்ல, புதிய வால் மீகி! வடமொழியில் புற்றை வல் மீகம் என்று அழைப்பார்கள். ஆகவே வல் மீகத்திலிருந்து வெளிப்பட்ட அவர் வால் மீகி என்று

(6-ம் பக்கம் பார்க்க)

# வற் வரிச் சட்ட மூலம் குறித்து

# மற்றொரு விவாதம் நடத்த முடியாது

## நிதியமைச்சர் சொக்ஸி அறிவிப்பு

(கொழும்பு)

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச்சட்ட மூலம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் இதுகுறித்த மற்றொரு விவாதத்தை நடத்த முடியாது என நிதியமைச்சர் கே.என. சொக்ஸி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின்; அரசியலமைப்புக்கு அமைவாகவே பெறுமதிசேர்க்கப்பட்ட இவ்வரிச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன்,

பாராளுமன்ற உறுப்பினர்களின் இணக்கத்துடனேயே இதற்கான விளக்கமும் அளிக்கப்பட்டது

இவ்வரிச்சட்டமூலம்பாராளுமன்றத்தில்சமர்ப்பித்த போது உயர் நீதிமன்றத்தால்பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெறுவதற்கு முன்னர், இவ்வரிச் சட்ட மூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியதீர்ப்பை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

(உ 8)

## யாழ். செயலகத்தில் தேர்தல் பணிகள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 25 ஆம் திகதி குடாநாட்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பணிகள் யாழ். செயலகத்தில் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டமோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வாகனப்பதிவுகள் மற்றும் செயற்பாடுகள் தேர்தல் பணிகள் முடிவடையும்வரைஇடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும்,

தேர்தல் பணிகள் முடிவடைந்ததும் மீண்டும் வாகனப் பதிவுகள் மற்றும் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-6)

## தவறிவிழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சட்டடவேலை செய்து கொண்டு இருந்தவேளை கால்தவறி கீழே வீழ்ந்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன் தினம்குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த செ. பிரான்சிஸ் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். (த-6)

## இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் நாயகம் நாளை யாழ். வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் நாயகம் ஜீ. ஏ.ஏ. விஜயரட்ணா மற்றும தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்திப்பணிப்பாளர் கே. ஜி. பியதாஸ, கல்விப்பகுதிப் பணிப்பாளர் ஜே. வீரசிங்கா ஆகியோர் 13 ஆம்திகதி வெள்ளிக்கிழமை யாழ். வரவுள்ளனர்.

அன்றைய தினம் யாழ்ப்பாண வலயம் 4 தொழில்நுட்பக்கல்லூரிப் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் ந. யோகராஜன் மற்றும் கல்லூரிஅதிபர் ஆகியோருடன் சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

பின்னர், கிளிநொச்சி சென்று அங்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடாத்திவரும் தொழில் நுட்பக் கல்லூரியை அரசுடமையாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இவர்கள் ஈடுபடவுள்ளனர்.

(உ-19)

## தெல்லிப்பழையில் பட்டப்பகலில் கொள்ளை

(ஏழாலை)

சுன்னாகம பகுதியிலுள்ள வங்கிஒன்றிலிருந்து பெண் ஒருவரினால் எடுத்துச்செல்லப்பட்ட 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் முற்பகல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சைக்கிளில் தனது மகளுடன் வங்கிக்குச்சென்று பணத்தை எடுத்துக்கொண்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த பொழுதே அவர்களைப் பின்தொடர்ந்து வந்தநபர் ஒருவரினால் பணம் அடையாளஅட்டை மற்றும் வங்கிப்புத்தகம் என்பன அடங்கிய கைப்பை பறித்துச்செல்லப்பட்டுள்ளது

இதுதொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(த-12)

## அடுத்த ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விழா யாழில் நடைபெறும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டிற்கான தேசிய விளையாட்டு விழாவை மாத்தறையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள இவ்விளையாட்டு நிகழ்வில் நாட்டின்பலபாகங்களில்இருந்தும் 3ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்களும்,வீராங்கனைகளும் பங்கேற்கின்றனர். (உ-8)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 4.00 மணிக்கு சென்அன்ரனிஸ் வி. க. எதிர் சென் மேரிஸ் வி. க, பி.ப 5 15 மணிக்கு கலைவாணி வி. க. எதிர் பாரதி வி. க. ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை, முதலிய கோவிலடி, செம்பாட்டம் தோட்டம்,மூளாய், துணைவி செட்டியார் மடம் பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் தொகைநாளுக்கு நாள அதிகரித்து வருகிறது.

இவ்வாறு மின பெறுவோர் அதிகரிப்பதால் சட்டரீதியாக மின்சாரம் பெறுவோருக்கு போதிய வலுவுடன் மின் கிடைப்பதில்லை. இதனால் இவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இவ் விடயம் குறித்து சித்தன் கேணியிலுள்ள மின்சார சபை அலுவலகத்திற்கு அறிவித்தும் தக்க நடவடிக்கை எடுக்க வில்லை என பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-59)

## ஒரேநாளில் ஐவரைப் பதம்பார்த்த விசர்நாய்

(காரைநகர்)

காரைநகர் நெடுங்காட்டுப் பகுதியில் கடந்த திங்களன்று ஐவர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர்.

விசர்நாய் கடித்தவர்களில் நால்வர் காரைநகர் வைத்திய சாலையிலும், படுகாயமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட நாயை ஊரவர்கள் அடித்துக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-246)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, மக்களுக்கு உணவு வழங்க முன்வருகை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ''வேலைக்காக'' உணவுத் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் உணவு வழங்க முன் வந்துள்ளது.

இப் பிரதேசங்களில் சமாதான நடவடிக்கைகளின் பின்னர் மீளக் குடியேறியுள்ள சுமார் 2 இலட்சத்து 17 ஆயிரம் மக்களுக்கே இத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படவுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலைகளில் இப் பணி முக்கிய பங்கு வகிக்கும் என இலங்கைக்கான உலக உணவுத் திட்டப் பிரதிநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(உ-8)

## உலக வங்கி உதவியுடன்,

# குடாநாட்டு நீதிமன்றங்களில் நிலவும் குறைபாடுகளைப் போக்க நடவடிக்கை

## நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின்நிதி உதவியுடன் யாழ் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த ஞாயிறன்று யாழ். மாவட்ட நீதிபதி இ.த விக்னராஜாவின் அலுவலகத்தில் அவரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் ஜி. பி.யு. வி.சி ஜயதிலக இவ்வாறு உறுதிமொழி வழங்கினார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. பிரேம்சங்கர் இராத்தினபுரிமேல் நீதிமன்ற நீதிபதி நளின் பெரோரா, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே பி.எஸ். வரதராசா யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினிதேவி ஆகியோர் இக் கலந்துரையாடலுக்கு சமுகமளித்திருந்தனர்.

ஜயதிலக அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களுக்குக் கிடைக்கின்ற சகல வளங்கள், வசதிகளையும் உலக வங்கியைக் கொண்டு ஏற்படுத்த நீதிச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வகையில் வெகுவிரைவில் சாவகச்சேரிப் பகுதியில் புதிய நீதிமன்றக் கட்டடம் அமைக்கப்பட்டு நீதிபதியும் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவித்தார்.

யாழ். விஜயம் செய்த ஜயதிலக அன்றைய தினம், அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியுள்ள பருத்தித்துறை நீதிமன்றம் மற்றும் சாவகச்சேரி நீதிமன்றத்தை மீள அமைப்பதற்கான இடம் என்பவற்றைப் பார்வையிட்டார்.

அத்துடன், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தையும், இடிபாடுகளுடன் காணப்படும் மல்லாகம் நீதிமன்றத்தையும் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-19,6)

## கொடியேற்றம்

(கொழும்புத்துறை)

சாட்டி சிந்தாத்திரைமாதா யாத்திரைத்தல திருவிழா கொடியேற்றநிகழ்வு இன்று மாலை 5 00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

அதனைத்தொடர்ந்து நாளை மாலை 5.30 மணிக்கு செபமாலையும் திருப்பலி நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 00 மணிக்கு முதற் திருப்பலியும் திருவிழா திருப்பலி காலை 9.00 மணிக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் தலைமையில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து திருச்சொரூபப்பவனியும் இடம்பெறும். (உ-262)

# காரைநகரில் வாந்திபேதி பரவும் அறிகுறிகள்

(காரைநகர்)

காரைநகர்ப் பகுதியில் வாந்திபேதி நோய் பரவுவதற்கான அறிகுறிகள் இனம் காணப்பட்டுள்ளன.

ஏற்கனவே இப்பகுதியில் சிலர் வாந்திபேதியினால் பீடிக்கப்பட்டிருப்பதுடன், மேலும் பரவும் அபாயமும் ஏற்பட்டிருப்பதாகசுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இப்பகுதியில் தற்போது வாந்திபேதி ஒழிப்பு நடவடிக்கைகள், மற்றும் விழிப்புப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(உ-246)

# தனிச் சிங்கள அரசமைக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## அஸ்கிரியபீட மகாநாயக்கர் அறைகூவல்

(கொழும்பு)

தனிச் சிங்கள அரசாங்கம் ஒன்றை அமைக்க அனைத்து மக்களும் ஒன்றுபடவேண்டுமென அஸ்கிரியபீட மகாநாயக்கர் உடுகம, சிறிபுத்தரகித்ததேரர் சிங்கள மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அஸ்கிரிய பீடாதிபதி மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாடாளுமன்றம் சென்றுள்ள ஒருசிலர் சுயநல அரசியல் நடத்தி வருவதாகவும் இவர்கள் மக்கள் நலன் கருதிச் செயற்படுவதில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கள மக்கள் ஒருபோதும் பிரியக்கூடாது என்றும் அவர்கள் தமக்குள் உள்ளகுறைபாடுகளைக் களையத் தவறினால் அது காரணமாக ஏனையோர் முன்னிலையில் தலைகுனிந்து இருக்கவேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடாதிருப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஐந்துகோடி ரூபாவை இலஞ்சமாக வழங்கியிருப்பதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் தேரர் மறுத்துரைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது; (ம)

# நெடுங்குளம் வீதி மக்கள் பாவனைக்கு அனுமதி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி கடந்த வாரம் முதல் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது

இப்பகுதியில் இராணுவ முகாம்அமைந்திருந்தமையால் பாதுகாப்புக்கருதி இது வரை காலமும் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

இப்பகுதிமக்கள் அண்மையில் மீளக் குடியமர்ந்ததையடுத்தே மேற்படி வீதி திறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்புத்துறை பிரதான வீதி, கடற்கரை வீதி என்பன இன்னமும் மக்கள் பாவனைக்குவிடப்படவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. (உ-262)

## இராசி பலன்

12.9.2002

(ஆவணி 27, வியாழன்)

சஷ்டி மு.இ. 7 46 வரை

விசாகம் பி.ப 12.55 வரை

இராகுகாலம் - 1 33 - 3.03

நல்ல நேரம் - 7 33 - 9 03

சஷ்டி விரதம்

**மேடம்**

பிரயாண பயம், காரிய தடங்கல் உறவினர் மனஸ்தாபம், வேலைக் கஷ்டம்.

**இடபம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும். உறவினர் வருகை, திடீர் பயணம்.

**மிதுனம்**

காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், தனவரவு, இலட்சுமிகரம்.

**கடகம்**

மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தொழில் நன்மை, வீண் வார்த்தை.

**சிங்கம்**

ஆழ்ந்த சிந்தனை, வீண் அலைச்சல், நல்ல உணவு கிடைத்தல், கல்விச் சிறப்பு.

**கன்னி**

நினைத்த காரியம் கைகூடும், தனவரவு, பிரயாண நன்மை, உறவினர் வருகை.

**துலாம்**

மாதர் நட்பு, தொழில் விருத்தி, வாக்குகலகம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**

கற்பனை மிகுதி, கூட்டு முயற்சி, பெரியோர் ஆதரவு, முயற்சி கைகூடும்:

**தனுசு**

பிரயாணக் கஷ்டம், அமைதிக் குறைவு, காரிய தாமதம், உடல்நலக் குறைவு.

**மகரம்**

நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், மனமகிழ்ச்சி, முயற்சி பலிதம்:

**கும்பம்**

கடுமையான முயற்சி, தூரதேசச் செய்தி, நல்ல சம்பவம், அதிகாரம்.

**மீனம்**

புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# நாவலர் மணிமண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் சமய சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகாரஅமைச்சினால் புனரமைக்கப்பட்டுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பி.ப. 5.00 மணி முதல் 6.00 மணிவரை சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இந்துசமயம் தொடர்பாகப் பல்வேறு அறிஞர்கள் இச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நவகையில், நாளை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையில் யாழ். இந்துக்கல்லூரிஇளைப்பாறிய உபஅதிபர் க. சிவராமலிங்கம் 'சைவ வாழ்வு' என்னும் விடயம்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## கிளி. அழகியல் கலாமன்றம்

# மலையகத்திற்கு விரைவில் கலைப் பயணம்

(கிளிநொச்சி)

வன்னியில்இருந்துசமாதான கலைப்பயணம் மேற்கொண்டு திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட கொழும்பு முதலான இடங்களுக்கு சென்ற 40கலைஞர்கள்சிறைச் சாலைகளுக்கும் சென்று சிறைக்கைதிகளுக்கு அன்பளிப்புப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி அழகியல் கலாமன்ற ஏற்பாட்டில் கலாமன்ற அதிபர் எஸ். விஜயசேகரன் தலைமையில்சென்றஇக் கலைக்குழுவினர் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் தமது கலைப்படைப்புக்களையும் நிகழ்த்தியுள்ளனர்.

இக்கலைஞர்களை கொழும்பு தமிழ்ச் சங்கம் பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இக்கலைஞர்கள் விரைவில் மலையகத்திற்கு கலைப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர். (உ)

## கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

வன்னிப்பிராந்தியத்தில் முக்கியத்துவம்வாய்ந்த ஆலயமான கிளிநொச்சி கந்தசாமி கோவிலின் மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது.

இவ் ஆலயப் புனரமைப்பிற்கு இந்து கலாசார அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு முதலானவையும் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி வர்த்தகர்களும் பொதுமக்களும் நிதிஉதவியை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# நல்லூர்கோட்ட மட்டத்தில் உதைபந்தாட்ட தாச்சிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்ட மட்டத்தில் உதைபந்தாட்ட மற்றும் தாச்சிப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன:

இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் என்றும்,

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நல்லூர் கல்விக் கோட்ட அலுவலகத்தில் உதைபந்தாட்ட போட்டி நடத்துவது சம்பந்தமான விடயங்கள் பற்றி பொறுப்பாசிரியர்களுடன் கலந்துரையாடப்படுமெனவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் அறிவித்துள்ளார்.

(உ-3)

## ஆதிக்கவிஞர்

அழைக்கப்பட ஆரம்பித்தார். அந்த வால் மீகிதான் ஆதி கவியாகி, அழியாப் புகழ் பெற்ற ராமாயண காவியத்தை இயற்றினார்.

சுவாமி கமலாத்மானந்தர்

# 19 வது அரசியல் திருத்தம் பொ. ஐ. மு. உறுப்பினர் றிச்சட் பத்திரன ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின 19 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்றிச்சட்பத்திரன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி அளித்திருந்த உறுதி மொழியின்படி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை முற்றாக நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனவே இன்றைய கால கட்டத்தில் ஆளும் அரசினால் கொண்டுவரப்படவுள்ள இத்திருத்த சட்ட மூலத்துக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்ப்புத்தெரிவிக்க முடியாது என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 20உறுப்பினர்கள் அரசினால்கொண்டுவரப்படவுள்ள இத்திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவு அளித்து வாக்களிக்கவுள்ளனர் என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன்நாட்டின் எதிர்காலம் குறித்துஇணைந்து செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# வாந்திபேதியினைப் பூண்டோடு ஒழிப்போம

1998ஆம் ஆண்டு எம்மைப் பரபரப்பிற்குள்ளாக்கிய வாந்திபேதி நோய் மீண்டும் எம்மத்தியில் புகுநதுள்ளது. இது விப்ரியோ கொலரா (Vibrio Cholerae) என்னும் பக்ரீரியாவினால் ஏற்படுகின்றது. இந்நோய் சாதாரண வாந்தி , வயிற்றோட்டம் தொடக்கம் மரணம்வரை பல்வேறு படிநிலைகளை உடையது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவரின் மலத்தின் மூலம் வெளியேறும் கிருமிகள் உணவு, நீர் ஆகியன மூலம் மற்றவரின் உடலைச் சென்றடைகின்றன.

### வயிற்றோட்டமும் வாந்தியும்

இந்நுண்ணங்கி மனிதனை அடைந்து 6 மணித்தியாலங்கள் தொடக்கம் 2-3 நாட்களுக்குள் நோயறிகுறிகளை உண்டாக்கும்.

- திடீர் வயிற்றோட்டம் அதிகளவிலான நீர்த்தன்மையான மலம் வெளியேறும். ஒரு நாளைக்கு 40 தடவைகளுக்கு மேலும் மலம் கழிப்பர். மலம் ஆனது அரிசிக் கஞ்சி போன்ற தோற்றத்தை அளிக்கும். மலம் கழிக்கும்போது வலியோ, கஷ்டமோ இருக்காது. இரத்தம் வெளியேறாது. இவற்றுடன் வாந்தியும் இருக்கும். வாந்தியின் போது எவ்வித கஷ்டமும் இருக்காது. மேலும் ஆடுகால் தசையில் பிடிப்பு ஏற்படலாம்.
- இந்நோயின்போது பாரியளவில் நீரிழப்பு ஏற்படுவதுதான் இறப்பிற்குக் காரணமாகும். இதனால் நோயின் ஆரம்ப காலப்பகுதியில், நோயாளி அதிக தாகத்துடன் காணப்படுவார். ஆனால் நோயின் தாக்கம் அதிகரிக்கும் போது நோயாளி மிகவும் சோர்ந்தும் நீர் பருகும் ஆர்வம் அற்றும் காணப்படுவார்.

### மயக்க நிலை

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் கண்டவுடன் உடனடியாக சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து நோயாளி மயக்க நிலையை அடையலாம். சிறுநீரகம் தொழிற்பாட்டை இழக்கத்தொடங்கும். (சிறுநீர் வெளியேற்றம் குறையும்) இதனாலும் நோயாளி இறக்க நேரிடலாம்.

ஆகவே, இந்நோய்க் கிருமித் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கு பின்வரும் முறைகளைக் கையாள்வது சாலச்சிறந்தது.

- ◆ எப்போதும் கொதித்தாறிய நீரைப் பருகுதல் வேண்டும்.
- ◆ பழங்கள், மரக்கறிகள், கீரை வகைகளை நன்றாக கழுவிப் பாவித்தல்வேண்டும். அதேபோல் உணவு தயாரிக்கமுன், உணவருந்தமுன், மலசலம் கழித்தபின் சவர்க்கார நீரினால் கை கழுவ வேண்டும்.
- ◆ மலசலகூடத்தினுள் மலம் கழித்தல், சிறுவர்களின் மலத்தையும் மலசலகூடத்தினுள்ளேயே அகற்றவேண்டும்.
- ◆ கை நகங்களைச் சுத்தமாக வெடிப் பராமரித்தல் வேண்டும்.
- ◆ குழந்தைகளிற்கு தாய்ப்பால் ஊட்டுதல் சிறந்தது. புட்டிப்பாலில் கிருமித்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகம்.
- ◆ பாதுகாப்பான கடைகளில் தயாரித்த உணவுகளை மட்டுமே உண்ணவேண்டும்.
- ◆ சமைத்த உணவுகளை இலையான், கரப்பான்பூச்சி, தூசி வந்தடையாமல் மூடி வைத்தல் வேண்டும்.
- ◆ துப்புரவற்ற முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்கள், சர்பத், ஐஸ்கிறீம் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் குளிரூட்டியில் இக்கிருமிகள் அழிவதில்லை.
- ◆ திருமணச்சடங்கு போன்ற விசேட தினங்களில் உணவுப் பொருட்களை சமைக்கும் பொழுது துப்புரவான முறையில் சமைத்தல் வேண்டும்.

செல்வி
கலைவாணி சுந்தரலிங்கம்
மருத்துவபீடம்,
யாழ். பலகலைக்கழகம்

- ◆ இந்நோயுற்றவர்களைப் பராமரிப்பவர்கள் தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவரது ஆடைகளை தொற்று நீக்கிகளைப் பாவித்து துப்புரவு செய்தல் வேண்டும்.
- ◆ இந்நோய் நீர் மூலம் மிகக்கூடுதலாகப் பரவுவதால் கரையோரப் பிரதேச மக்கள் மிகக் கூடுதலான கவனம் எடுத்தல் வேண்டும்.
- ◆ நோயாளிகளுக்கு தகுந்த முறையில் சிகிச்சை அளிக்க தவறியவிடத்து இறப்பை அடையலாம்.

மேற்குறிப்பிட்ட முறைகளைப் பின்பற்றி மக்கள் தங்களை இந்நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்வது அவசியமாகும்.

# சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை விசாரணை செய்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளனர்.

இறப்பர் கூட்டுத்தாபனத்தின் இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய நிதிமோசடி சம்பந்தமாகவே இவ்விசாரணை செய்யப்படவுள்ளார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை கொழும்பு கோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் பணிப்பின் பேரில் திறைசேரியினால் பெருந் தொகைப்பணம் இறப்பர் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தப்பட்டதாக மேலதிக மாவட்ட நீதிபதி பிரிந்த மெண்டிஸ் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை - கரவெட்டி
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. கேள்விப் பத்திரங்கள் 2002.09.19ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர்," வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2002.09.23 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
3. கேள்விகள் 2002.09.23 நண்பகல் 12.00 மணியளவில் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்.
4. மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம்(ரூபா) | மீளளிக்கப் படாத பொருட்கள் சேவைகள் வரி(ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | தச்சன்தோப்பு கிழக்கு வீதி | 1500 | 250 | 31.25 |
| 02. | மாதாகோயில் வீதி, அல்வாய் | 2000 | 250 | 31.25 |
| 03. | வெள்ளுரு வைரவர் கோயில் ஒழுங்கை | 500 | 250 | 31.25 |
| 04. | கலட்டிப்பிள்ளையார் கோயில் வீதி | 2300 | 250 | 31.25 |
| 05. | பண்டகை ஒழுங்கை | 2200 | 250 | 31.25 |
| 06. | சோளங்கள் ச.ச. நிலைய வீதி | 1500 | 250 | 31.25 |
| 07. | சண்டில்குளம் வீதி | 1500 | 250 | 31.25 |
| 08. | குடவத்தை ஊரெல்லை வீதி | 2300 | 250 | 31.25 |
| 09. | ராமுவளவுவீதி, உடுப்பிட்டி | 1500 | 250 | 31.25 |
| 10. | கிளான் வாய்க்கால் வீதி | 2000 | 250 | 31.25 |
| 11. | மிண்டன் வாய்க்கால் வீதி | 500 | 250 | 31.25 |
| 12. | நுணுவில் பிள்ளையார் கோயில் வீதி | 2300 | 250 | 31.25 |
| 13. | நுழையன்தோட்டம் வீதி | 2300 | 250 | 31.25 |
| 14. | துவாளி பிள்ளையார் வீதி | 1800 | 250 | 31.25 |
| 15. | இரும்புமதவடி ஆலங்கட்டை வீதி | 2400 | 250 | 31.25 |
| 16. | போக்காலை ஒழுங்கை | 1500 | 250 | 31.25 |
| 17. | உச்சில் அம்மன் கோயில் வீதி | 1500 | 250 | 31.25 |
| 18. | தூதாவளை மணியகாரன் தோட்ட ஒழுங்கை | 1000 | 250 | 31.25 |
| 19. | சக்களாவத்தை ஒழுங்கை | 2300 | 250 | 31.25 |
| 20. | வெலிக்கந்தோட்ட பிள்ளையார் வீதி | 2500 | 250 | 31.25 |
| 21. | ஞானசாரியார் வீதி | 2000 | 250 | 31.25 |
| 22. | சந்திரவளவு காளிகோயில் வீதி | 1000 | 250 | 31.25 |
| 23. | ஐமுலை வீதி | 2000 | 250 | 31.25 |

த. ஜெயராசா, ஜே.பி,
தவிசாளர்,
வட.தெ.மே.பிரதேச சபை.

[C/4996]

# ஈழ நாட்டிற்குப் பெரும்புகழ் தேடித் தந்துள்ள பெரியார் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

ஈழ நாட்டில் 1877ஆம் ஆண்டு பிறந்து 1947ஆம் ஆண்டுவரை வாழ்ந்து உலகின் பலபாகங்களிலும் பெருமையுடன் போற்றப்படும் பேரறிஞனாகத் திகழ்ந்தவர் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி ஆவார்.

### கலாசார ஆய்வு

இவருடைய மேலைத்தேச கீழைத்தேச, இந்தியப் பண்பாடுகள், கலாசாரங்கள் பற்றிய ஆய்வுகள் அபாரமானவை. கௌரவமான ஒரு குடும்பத்திற் பிறந்தவராயினும், சிறுவயதிற் தந்தையாரை இழந்து தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து பிற்காலத்தில் கலாயோகியாக, மகாமேதையாகத் திகழ்ந்த இப்பெரியாரின் ஆய்வுகள் மேலைத்தேசத்தவரையே வியக்க வைத்ததெனலாம். சிறப்ப தத்துவங்களை சிறப்புடன் ஆராய்ந்து வெளிட்டார்.

### அஞ்சல் தலை

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கலாயோகி அவர்களின் ஆய்வுகள், சிந்தனைகளைத் தொகுத்துப் பல்கலைக்கழக மாணவர்கட்கு ஆராய்ச்சிக்குரியனவாக்கியுள்ளனர். இந்தியாவும், இலங்கையும் இவரை நினைவுகூருமுகமாக அஞ்சற்தலைகள் வெளியிட்டும் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்கியும் உலகுக்கு இவர் பெருமையை வெளிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனந்தகுமாரசுவாமியின் இறையியல் சம்பந்தமான ஆய்வுகள் கட்டுரைகள் யாவும் இன்றைய மக்கட்கு கிடைத்தற்கரிய பொக்கிஷங்களாகவுள்ளன. மேலை நாடுகளிற்கு சென்று வாழ்ந்த போதும், அந்நாட்டு நாகரீக வலையிற் சிக்கிவிடாது பாரத பண்பாட்டு கலாசாரங்களைப் பெரிதாகப் போற்றியதுடன், அந்நாட்டவரும் எங்கள் பண்பாடு, கலாசாரங்களின் தனித்துவத்தையும், அதிலுள்ள சிறப்பையும் நன்கு புரியும்படியாக ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டார்.

### பட்டங்கள் பெற்றார்

லண்டன் சர்வ கலாசாலையில் பல்வேறு சிறப்புப் பட்டங்களையும் பெற்ற இவர், இலங்கையிலும் ஆராய்ச்சித் துறைகளில் ஆரம்பத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. 1906ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்த இந்துசாதனம் ஆங்கில இதழில் இப்பெரியாரின் வாழ்க்கை வரலாறும், பெருமைகளும்; சேவைகளும் சிறப்பாக வெளியிடப்பட்டன. இதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ்ச் சங்கத்தினால் இப்பெரியாருக்கு ''வித்யா விநோதன்'' எனும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மகாத்மா காந்தியடிகளாலும், கலாயோகி அவர்களாலும் வெளியிடப்பட்ட ''தேசியலட்சியக் கட்டுரைகளும் சுதேசிய சிறப்புப் பற்றிய கட்டுரைகளும்'' பெரிதும் மதிக்கப்பட்டுக் காந்தீயத் தொண்டர்களால் வரவேற்கப்பட்டன.

### நடராஜ தத்துவம்

கலாயோகி அமெரிக்காவிற் பொறுப்பான பதவிகளை வகித்த போது எழுதிய நடராஜ தத்துவம் சிவ நடனத்தின் உண்மைப் பொருள் பற்றிய ஆய்வு உலகெங்கும் சிவ வழிபாட்டின் பெருமையை மேலோங்கச் செய்தது எனலாம். இயற்கை பற்றியும் தெய்வீகம் பற்றியும் கலை கலாசாரங்கள் பற்றியும் ஆழமாகச் சிந்தித்து அரும்பெரும் ஆய்வுகளை வெளிக்கொணர்ந்து உலகுக்கு வழிகாட்டிய கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பற்றி வெளிநாட்டினர் தெரிந்திருக்குமளவிற்கு இலங்கை மக்கள் தெரியாமலே இன்றும் உள்ளனர்.

கு. தியாகராஜசர்மா

வாழ்நாளில் பெரும் பகுதியை வெளிநாடுகளிற் கழித்தமையாலும், இவருடைய ஆய்வுகள் அந்நிய மொழிகளிலே பெருமளவு வெளிவந்தமையாலும் இந்நாட்டவரிற் படித்த, மேல்மட்ட வகுப்பினரே இவரைத் தெரிந்திருக்க வாய்ப்புண்டானது. சமய, கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவுகளாற் தாக்குண்டிருக்கும் இன்றைய தமிழ்ச் சமுதாயம் இவர் போன்ற பெரியோர்களின் கருத்துக்களையும், ஆய்வுகளையும் தேடிப் பாதுகாப்பதும், அவற்றை மக்கட்கு வெளிப்படுத்துவதும் அவசியமும், அத்தியாவசியமான தேவையுமாகும்.

### அரசியல் கட்சிகள் முரண்படுவதை விடுத்து

# சமாதானத்துக்கான இச் சந்தர்ப்பத்தை சரியான வழியில் பயன்படுத்த வேண்டும்

## நெதர்லாந்துத் தூதர் அறிவுரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம்குறித்து முரண்படுவதை விடுத்து சமாதானத்துக்காக கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைநழுவ விடாது பயன்படுத்த வேண்டும் என இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் சுசான் பிளங்பேட் இலங்கையில் உள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு டிரான்ஸ்ஏசியா ஹோட்டலில் நடை பெற்ற நெதர்லாந்துநூல்வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்: பல வளங்களையும் கொண்டுள்ள இந்த நாட்டில் சமாதானம் நிலவுமாயின், நாடு மிகவும் விரைவாக விருத்தியடையும்.

ஆனால், இன முரண்பாடுகள் இதற்கு தடையாகவுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதடைகளையும் தாண்டி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர்ரணில்விக்கிரமசிங்கா மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்குநெதர்லாந்துதொடர்ந்து ஆதரவு வழங்கும் எனவும்,

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கத்தை அரசு நீக்கியுள்ளதால், இது தொடர்பான கருத்து முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வதில் எதுவித பலனும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

### மாணவர் மத்தியில் படைப்பாற்றல்போட்டி

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் வகையில் நாடளாவிய ரீதியில் சிறுகதை, கவிதை, நாடகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மூன்று பிரிவுகளாக இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அகில இலங்கை, தேசிய நூல் அபிவிருத்திச்சபை, பாடசாலைக் கல்வியமைச்சு, இசுறுபாய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19,6)

# கைதிகள் பரிமாற்றத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 14பேர் அடங்குவர்

## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே போர்க் கைதிகளை பரிமாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவத்தளபதிலெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பலகல்ல மேலும் கருத்துக்கூறுகையில்

தமிழீழ விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுவோரில் சிலரது விடுதலை குறித்துஏற்பட்ட சட்டச் சிக்கல்கள்காரணமாகவே குறிப்பிட்ட தினத்தில் போர்க் கைதிகள் பரிமாற்றம் இடம் பெறவில்லை;

இச் சட்டச் சிக்கல்கள் குறித்த ஆராய்வுகளை சகல தரப்பினரும் மேற்கொண்டு வருவதாகவும், போர்க்கைதிரள் பரிமாற்றம் எப்போது நடை பெறும்என்பதை திட்டவட்டமாக கூற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பரிமாறிக் கொள்ளப்படவுள்ள போர்கைதிகளில் 14 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கஉறுப்பினர்கள் அடங்குவதாகவும் இவர்களுக்கு பதிலாக கடற்படை அதிகாரி ஒருவர் உட்பட 7 இராணுவ வீரார்களை விடுதலை செய்ய விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் 23 பேர் அடங்கிய பெயர்ப்பட்டியல் ஒன்றினை அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காமீதான குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியையும் தமிழர் விடுதலை கூட்டணியின் உறுப்பினர் நீலன் திருச்செல்வம் கொலைச் சூத்திரதாரியையும் விடுதலை செய்ய முடியாது என பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன்தினம் பாராளுமன்றில் கூறியிருந்ததும்இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

## யுத்தத்தால் வீடிழந்த 400 பேருக்கு இருப்பிடவசதி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் தமது வீடுகளை முற்றாக இழந்தவர்களுக்கென கரித்தாஸ், கியூடெக் நிறுவனங்கள் இணைந்து அமைத்த குடியிருப்புக்கள் பயனாளிகளிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளன

இக் குடியிருப்புகளினால் 400 பேர் பயனடையவுள்ளனர்.

குருநகர், இளவாலை, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா 100 பயனாளிகளிடம் இவை கையளிக்கப்படவுள்ளன. (உ-6)

### ஒரு தொகுதியினர்க்கு

## அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பட்டதாரி ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு இன்னும் சில மாதங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் இந் நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சு ஆதாரம் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை, கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி 750 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்ட போதும் அவர்களில் 80 பேர் தமது பதவியைப் பொறுப்பேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

### அடிப்படை வசதிகள் ஏதுமின்றி

## பெயரளவில் இயங்கும் உயர் தொழில் நுட்பக் கல்லூரி

(உடுவில்)

அடிப்படைக்கற்கை வசதிகளோ, வகுப்பறை வசதிகளோ போதியளவு விரிவுரையாளர்களோஅற்ற நிலையில் பெயரளவிலேயே எமது கல்விச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றார்கள் உயர் தொழில்நுட்பக்கல்லூரிமாணவர்கள்;

திருநெல்வேலிப்பகுதியில் வீடொன்றில் இயங்கிவரும் இந்த உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் பல நூற்றுக்கணக்கானமாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு தேவையான வகுப்பறை வசதிகளோ கற்றல் உபகரணங்களோ போதியளவு இல்லை இவர்கள் நெருக்கமான வகுப்பறைகளில்இருந்து கல்விகற்க வேண்டியுள்ளது;

அத்துடன் சீரான மின்சார வசதிகளோ, உணவுச்சாலையோ இல்லாததால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள்;

நிரந்தர விரிவுரையாளர்கள் போதியளவு இல்லாமையால் விரிவுரைகள் ஒழுங்கான முறையில் நடப்பதில்லை.

இதேவேளை, பகுதிநேர விரிவுரையாளர்களுக்குரிய கடந்த வருட கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இதனால் அவர்களுடைய சேவையை பெறுவது கடினமாகஉள்ளது; குறிப்பாக ஆங்கில விரிவுரையாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.பரீட்சைகள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிப்பது போன்றவற்றிக்கூடதெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதில்லை.

கடந்த காலங்களில் தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த உயர்மட்டக் குழுக்கள் இங்குள்ளகுறைகளை ஆராய்ந்து கோப்பாய்ப்பகுதியில் புதிய கட்டடங்களை அமைத்துத் தருவதற்கும் பொறியியல் உட்படபல புதிய துறைகளை ஆரம்பிப்பதற்கும் உறுதிமொழிவழங்கிச் சென்ற போதும் இன்றுவரை அதற்குரிய எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது (உ-161)

### அதிர்ஷ்டசாலிகள்

## தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ கால இலங்கை வங்கி மேற்தரக் கிளை கரும பீடத்தில் வைப்புச் செய்தவர்களிடையே அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட போது பின்வரும் வாடிக்கையாளர்கள் அதிர்ஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

**முதலாம் பரிசு**

இ. வரதராசா - வட்டுக்கோட்டை
(லுமாலா துவிச்சக்கரவண்டி)

**இரண்டாம் பரிசு**

பி.ஜே. மானுவேரபில் - மன்னர்
(மின்விசிறி)

**மூன்றாம் பரிசு**

கே. ஆருரன் - சரவெட்டி
(றைஸ் குக்கர்)

**ஆறுதல் பரிசுகள்**

இ. கணேசராசா - நல்லூர்
லோ. பிறேம்குமார் - யாழ்ப்பாணம்
ஸ்ரீ. மதுமிதா - நல்லூர்
செ. செந்தினி - நல்லூர்
ப அபிசா - ஏழாலை

(உ)

### ஐ.சி.சி.கிரிக்கெட் போட்டி

## கொழும்பில் இன்று ரணில் தொடக்கி வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஐ.சி.சி கிரிக்கெட் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

உலக நாடுகள் பல பங்கேற்கும் இப்போட்டியை பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஆரம்பித்து வைக்கவுள்ளார்:

இன்று முதல் 29ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள இப் போட்டியில் பங்கேற்கவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு,

12ஆம் திகதி-இலங்கை எதிர் பாகிஸ்தான்

13ஆம் திகதி-தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்திய தீவுகள்

14ஆம் திகதி-இந்தியாஎதிர் சிம்பாவே

15ஆம் திகதி-அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து

16ஆம் திகதி-இலங்கை எதிர் கொலன்ட்

17ஆம்திகதி-மேற்கிந்திய தீவுகள் எதிர் கென்யா

18ஆம்திகதி-இங்கிலாந்து எதிர் சிம்பாவே

19ஆம்திகதி-அவுஸ்திரேலியா எதிர் பங்களாதேஷ்

20ஆம்திகதி-தென் ஆபிரிக்கா எதிர் கென்யா

21ஆம்திகதி-பாகிஸ்தான் எதிர் கொலன்ட்

22ஆம்திகதி-இங்கிலாந்து எதிர் இந்தியா

23ஆம்திகதி- நியூசிலாந்து எதிர் பங்களாதேஷ்

இப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகொள்ளும்அணிகளுக்கிடையே அரையிறுதி ஆட்டங்கள் 25 ஆம் திகதி தொடக்கம்28ஆம்திகதி வரை நடைபெறவுள்ளன.

இறுதி ஆட்டங்கள் 29 ஆம் 30ஆம்திகதிகளில் இடம் பெறும். (உ-7)

## இடம் மாற்றம்

குருநகர் பாங்சால் வீதியில் இயங்கிவந்த அகவொளிகுடும்பவள நிலையம் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை மேற்படி நிலையமானது சென்பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள சென்பற்றிக்ஸ் கல்லூரிக் கட்டடத்தில் தொடர்ந்து செயற்பட இருக்கின்றது. (உ-262)

### எதிர்க்கட்சி உறுப்பினர்களின்

## ஆதரவை பெற முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களது திருத்தங்களையும் ஏற்றுக் கொள்வதென நேற்று முன்தினம் அவசரமாகக் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது:

இதனை அடுத்து 19 வது அரசியல் திருத்தச் சட்ட மூலத்தை உடனடியாக வர்த்தமானியில் வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

19 வதுதிருத்தச்சட்ட.மூலத்திற்கு எதிர்க்கட்சி எம். பிக்களின்ஆதரவுக்காக அமைச்சர்கள் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தனர்.

இதேவேளை இத்திருத்தச் சட்ட மூலத்திற்குதமிழ்க்கட்சி எம். பிக்களும் ஆதரவுஅளிக்க முன் வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## செரண்டிப் எக்ஸ்பிரஸ் விமானசேவை இன்றுமுதல் தினமும் இரு தடவைகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும்இடையில் செரண்டிப் எக்ஸ்பிரஸ் என்ற தனியார் விமான சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது;

இன்று முதல்நாள்ஒன்றிற்கு இரண்டு தடவைகள் இவ் விமான சேவை நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது:

இந்நிறுவனத்தின் முதலாவது விமான சேவை நேற்று முன்தினம் 44 பயணிகளுடன் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இரண்டாவது விமானசேவை நிறுவனம்இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வழியினும் என்.

குறள்

வலம்புரி

## பகிர்வு அவசியம்

யாழ் தொலைத் தொடர்பு நிலையத்திற்கென மூன்றாவது பரிவர்த்தனை மையமொன்று நேற்று அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கரால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் குடா நாட்டில் தொலைபேசி பாவனையைப் பெறப் பலர் விண்ணப்பித்திருந்த போதிலும் அதனை நிறைவேற்ற முடியாத நிலையில் யாழ் தொலைத் தொடர்பு நிலையம் உள்ளது.

இலங்கையில் சேவையை வழங்கி வருமானம் உழைக்கின்ற நிறுவனமாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள தொலை பேசிச் சேவைக்கான கேள்வி (Demand) யைப் பூர்த்தி செய்து நிறைந்த வருமானத்தை உழைக்க முடியாமைக்குக் காரணம் என்ன? என்பது புரியாத புதிராகவேயுள்ளது.

இந் நிலையில் புதியதோர் பரிவர்த்தனை நிலையம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஓரளவு ஆறுதலை அளிப்பதாகவுள்ளது. எனினும் புதிய பரிவர்த்தனை நிலையத்தின்மூலம் வழங்கப்படக் கூடிய தொலைபேசிகள் எவ்வளவு தூரம் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைத்துள்ளதென்பதைப் பொறுத்தே அதன் பயன் கணிக்கப்படும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 1999ம் ஆண்டில் தொலைபேசிக்காக விண்ணப்பித்த பலர் இருக்கின்ற போது சிலருடைய வீடுகளில்- கடைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொலைபேசிகள் இருப்பதைக் காணமுடிகிறது. இத்தகைய தவறுகள் எவ்வாறு நடந்தன என்பதை ஆராயப் புறப்பட்டால் அதன் முடிவுகள் கசப்பையே தருமென்பதால் இனிமேல் நடக்கப் போவதை அவதானித்து அதனைச்சரியான பகிர்வு அடிப்படையில் வழங்குவதற்கு யாழ் ரெலிகொம் நிர்வாகம் நடவடிக்கை எடுப்பது இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கும்.

வருமான நோக்கோடு உழைக்கின்ற இத்தகைய அமைப்புகள் தமது பணியை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளத் தவறின் வாடிக்கையாளர்கள் அவற்றின் மீதான நம்பகத் தன்மையை இழந்து விடுவர்.

# பாரதத்தின் பண்டைய தமிழ்க் கலாசாரம்

# கிழக்காசிய நாடுகளில் புதைந்து கிடக்கின்றது

(நேற்றைய தொடர்ச்சி)

### கடாரம்

நம தமிழ்ச் சரித்திரத்தில் பண்ணை, இளாமுரிதேசம எனப்பட்டவை சுமாத்திராவில் தான் உள்ளது சுடுமண் சுற்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் சிவன், கணேசர், நந்தி, பிரம்மா போன்ற தெய்வங்களைச் சுமாத்திராவில் காணலாம், கி.பி.11ஆம் நூற்றாண்டு சோழ மன்னன் முதலாம் இராசராசன், இராசேந்திரன்கல்வெட்டுகள்தென்னிந்தியாவுடன் ஏற்பட்ட பிணைப்பை வெளிப்படுத்துகிறது. சூளாமணி வர்மன் என்ற சைலேந்திரவர்மன் அரசன் சோழதேச நாகபட்டினத்துப் பௌத்த விகாரத்துக்குக் கொடைகள் அளித்தான். இராசேந்திரசோழனோ கடாரம் (கேடா) ஸ்ரீவிஜயம் இவைகளை வென்றதாகப் பிரசஸ்தி பூண்டான். தஞ்சை பெரிய கோயில் கருவறை தெற்குச் சுவரில் முதலாம் இராசேந்திர சோழனின் ஒரு கல்வெட்டுச் சாசனம் படிக்கலாம்.

''அலைகடல் நடுவுள் பல
கலஞ் செலுத்தில்
சங்கிராம விசையோத்துங்க
வர்மனாகிய
கடாரத் தரசனை வாகயம்
பொருகடல் கும்பக்
கரியொடு மகப்படுத்துரிமை
யிற் பிறக்கிய பொருனெதிப்
பிறக்கமும்''

கி.பி 1031ல் முதலாம் இராசேந்திரன் கடலில் கலம் செலுத்தி கடாரம் சென்று விசையோத்துங்க வர்மனை வாகை சூடி, அவன் யானையையும் தோரணத்தையும் கவர்ந்து, பின் ஸ்ரீவிஜயம் பன்னை, சுமத்திராவின் கீழ்க்கரை! மேற்கரை மலையூர், மத்திய பாகமாயிருடிங்கம், கேடாவுக்குத் தெற்கே இலங்காசோகம், கிராபூ சந்திக்குப் பக்கலில் மாப்பப்பானம், மலேயாவுக்கு மேற்புறம் தகோபா, தெம்பலில் எனப்படும் மாதமாலிங்கம், சுமாத்திரா வடபகுதி இலாமுரிதேசம் நிக்கோபார்தீவுகளான நக்கவாரம் - இவ்வளவும் வென்றான் என்பதே சாசன சாரம். 1084ல் குலோத்துங்க சோழன் இந்த நாகபட்டணத்து சைலேந்திர சூளாமணி விகாரத்துக்குக் கிராமங்கள் அளித்தான.

### தமிழ்லிபி

மலக்கா தீவுகளை நாகரிகமாககிய முதல்மன்னர் பெயர் பரமேச்வரன். பூர்ணவர்மன் என்ற அரசனின் கல்லெழுத்துக்களின் லிபி பல்லவ பாணியே கி.பி 1511ல் போர்த்துக்கீசியர் புகும்வரை இங்குத் தமிழ்லிபிவிளையாடியது.

சோழர்களுக்குமட்டுமா செம்பியன்' என்ற பெயருண்டு? பர்மாவில் அரசுப் பார்வையாளனுக்குச் செம்பியன்என்று தான் பெயர்

ஜாவா தீவில் கி.பி,732இல் ஒநசசானம் சஞ்சயஎன்னும் அரசன் ஒருகுன்றின் மீதுக்தச அமைதிக்காக ஒரு லிங்கப் பிரதிட்டை செய்தான். நம்பல்லவர்களின் கல்வெட்டுகளும் இந்த அரசர்கள் குடிமக்களின் நன்மைக்காகத் தளிகள்சமைத்ததாகத் தான் கூறுகின்றன. ஜாவா சிவனின் தோற்றம்நம் சிவனைப் போலவே, ஜடாமுடி, சிரசில் கங்கை, பூந்துகூடன், திரிநேந்திரனாய் இருக்கும். யமன், அக்னி, குபேரன் அவன் மனைவி ஹரீதி, காமன்

## நாராயணஸ்வாமி

போன்றவர்கள் திக்பாலகர்கள. இறந்த மூதாதையர்வழிபாடு, புனித (தீர்த்தம்) நீராடுதல் எல்லாமே நம்மைப் போல்வன. அங்குள்ள ஒருநதியின் பெயரும் காவேரி இராமாயண புடைப்புச் சிற்பங்கள் கலாரத்தினங்கள. யவத்வீபமே ஜாவா எனமருவியது.

### சடங்குகள்

இங்கே குடியேறியவர்களில் முக்கியமானவர் அகஸ்தியர் இந்த அகஸ்தியர் துங்கபத்திரா தீரவாசி இவரைப் பின்பற்றித் தொடர்ந்தவர் திரணபிந்து மத்ய ஜாவாவில் ஒரு ஆலயத்திரள் அசல் மகாவலிபுர பஞ்சபாண்டவ ரதங்களைப் போலவே தோன்றும். இவற்றின் பெயரைப் பாருங்கள். யுதிஷ்ட்ர, அர்ச்சுன, பீம ஆலயங்களே கி.பி. 860இல் பிராம்பணத்தில் தட்ச பன்னன் நிறுவிய சண்டிகோயிலில் இராமாயண சேது பந்தனம் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஜாவாவை ஒட்டிக் கொண்டிருப்பது பாலித்தீவு, நம்நாட்டில் கிருகஸ்தர்களுக்கு எவ்வளவுசடங்குகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவையும் இங்கே காணலாம். மனித வாழ்வை நிலையாக்க ஒருமனித யக்ஞம், இறந்தவர்களுக்குப் பித்ருயக்ஞம், ஏகாதசருகதிரனுக்குப் பூதயக்ஞம் இப்படிப்பலஉண்டு. பாலிஅரசாங்கமே இத்தீவின் நன்மைக்குப் பிராயச்சித்த நிங்பூமி என்ற ஒரு சடங்கைச் செய்தது நம் ஊர்போல் தெய்வங்கள் ஊர்வலமாகத் தோளில் தூக்கிச் செல்லப்பட்டன. இத்தீவிலிருந்து வடக்கே சென்றால், போர்ணியோ போகலாம், பர்க்கினாத் த்வீபமான இத்தீவில் வேத முறைகள் அனுஷ்டிக்கப்பட்டன. மூலவர்மன் என்றமன்னன் வேள்விகளுக்காகஇந்தியாவிலிருந்து விற்பன்னர்களைத் தருவித்தான். பல்லவர்களைப்போல இங்கும் பருவர்ணயாகம்புரிந்தார்கள்.

இப்பொழுதுகேடா என வழங்குவது தடாக இது ஒரு துறைமுகம இங்கு ஒரு பஞ்சலோக அகஸ்த்தியர் சிலை கிடைத்தது. நம் கலாசாரம் மெதுவாக மலேயா வழிபிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் பாவியது. இந்நாட்டு மொழியின் வேர் நம்பகுதியில் முளைத்தது. தலைப்பாகை, வெண்கல மணி, நூபுரம் எல்லமே இங்கிருந்து சென்றவை. இங்குள்ள நாட்டுப் பாடல்களில் நம் வேதகீதம் ஒலிக்கும் பாங்காக்கில் சகரிவம்சமன்னர்கள் தென்னிந்திய பண்டிகைகள், சடங்குகள் இவைகளை அனுசரித்தனர் அதில் பிரதானமானது திருவெம்பாவை திருப்பாவை விழா. ராஜசபையில் பலர் கூடி திருவெம்பாவையையும்- திருப்பாவையையும் ஓதுவார்கள். இந் நகரில் ஒரு ஆலயம். அதன் குரு ஆஷாடாசாரியன். தாய்லாந்து அரசனின் குருவாம தேவமுனி இவ்விருவரும் ஓதியது தேவாரப் பதிகங்களே.

### விஷ்ணுவின் அம்சம்

தேவபுத்திரன், தேவராசன் என்று அரசர்களையே தெய்வமாக்கும் பழக்கம் இங்கிருந்து பரவியது. கம்போடியாவில் கி.பி 8ஆம் நூற்றாண்டில் முதலாம் ஜயவர்மன் நிறுவிய இந்ததேவராஜ வணக்கம் ஓங்கியது. இவன்ராணி பாலஸ்வாமினி ஒரு வைணவ அந்தணனின் மகள். இவ் வணக்கத்தை நிறுவஅரசன்இந்தியாவிலிருந்து ஹிரண்யதாமன் என்ற தாந்திரீகனை வரவழைத்தான் அங்கோர் வாட்டில் விளங்கும் விஷ்ணு மகாவிஷ்ணுவல்ல பூத உடலை நீத்த பின் விஷ்ணுவின் அம்சமாகிவிட்ட இரண்டாம் ஜயவர்மனுடையதே. தேவபுத்திரன் தேவராஜன் ஆனான். ஏர்லங்கா அரசனின் கதையும் இதேதான். நம்பாண்டிநாட்டு மன்னன் அரிகேசரிபெயரால் அரிகேசராய நம என்று எழவில்லையா? அதுபோலத்தான் சோழமன்னர்சரித்திரத்திலும் அரிஞ்சயன், ராசாதித்தன் ஆதித்தன் இறந்த இடத்தில் அதிதிகிரகம் எழும்பி அரிஞ்சயேச்வரம் ராஜாதித்தேஸ்வரம், ஆதித்தேஸ்வரம் தளிகள் ஆயின பல்லவ அரசர்கள் தாங்கள் நிறுவிய கோயிலுக்குத் தங்கள் பெயரையே கொடுத்தனர். மகேந்திர விஷ்ணு கிரகம், பரமேச்வர விண்ணகரம் ராஜசிம்மேச்வரம் இப்படிப்பல இப்பழக்கம் கடல் கடந்துபரவியதைப் பார்ப்போம். ஹர்சவர்மன் ஜயவர்மன்-பரமருத்திரலோக பரமசிவபாத என்ற பெயரில் ஆலயங்களை நிறுவினர். சக்ரிவம்ச மன்னர் முடி சூடியது எப்படி?

சிவனையும், விஷ்ணுவையும் அரசனின்உடலில்ஆவிர்ப்பவிக்க மகாராஜகுரு மந்திரங்களை உச்சாடனம்செய்வார்அங்குசிலஆசாரியர்களின் வம்சப்பெயர் ஓம் என்பதாம்.

பராபுதூரும் அங்கோர்வார்டும்

இந்தியாவில் தாந்திரிகம் பற்றி அறிவோம். இது பின் பௌத்த மதத்தில் நுழைந்து கிழக்குத் தீவுகளில் புகுந்து இத்தாந்திரீகத்தை அங்கு 8ம் நூற்றாண்டில் நிறுவியவன் நம் நாட்டினன். ஜாவாபராபுதூர் ஒரு உலக அதிசயம். நம் திரு மூலர் போதித்தகொள்கைகளான தத்வத்தை நுட்பமாகப் போதிக்கும் அவ்வாலய அமைப்பு நம் ஊரில் சக்கரஸ்தாபனம் பூசைக்குரியது. நம் சக்கரங்கள் போலவே தான் பராபுதூர் வரைபடமும்இருக்கும். அது ஒரு யந்திர ஸ்தாபனம் கல்லால் ஆனது. விகார என்பது'பர' ஆகியது சம்பார பூதர மிகப்பவித்திர மானதைச் சுமக்கும் குன்று ஒரு குன்றைப் பலபடிகளுடன் ஆலயமாக்கி அதன் சிகரத்தில் ஒரு தெய்வத்ரை வஜ்த்பரியங்காசனத்தில் அமர்த்தி விட்டனர்.

அடுத்தது அங்கோர் வார் இந்த ஆலய அமைப்பு அப்படியே நம்ஆலயங்களிலிருந்து அனுசரிக்கப்பட்டது. தேவர்கள, அப்சரஸ், நந்தி, நாகர் இப்படி கி பி 9 லிருந்து 13ம் நூற்றாண்டு வரை ஓங்கியிருந்த கேமல் நாகரிகத்தில் மலர்ந்த ஒரு புஷ்பம் கி. பி. 1432ல் துவண்டு விட்டது. நம் தேசத்தில் சிவன் மேரு பர்வதத்தில் உறைவதாக ஒரு ஐதீகம் இதையொட்டி அங்கோர் வாட் ஆலயத்திலும் சிகரங்களுண்டு நீராழி மண்டபம் போல் நீர் புகுவதற்கு பாலம் பாதைகளாகபிரகாரம் கோபுரங்களுடன்விளங்கியது; இவ்வாலயப் பிரகாரம் ஒவ்வொன்றும் ஒரு மைல் நீளமென்றால் கம்பீரத்தை உணர்ந்து கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மத்தியில் ஒரு தாமரை மலர்ந்ததுபோல் கர்ப்பக்கிரகம் ஓங்கிநிற்கிறது. இதைத் தொலைவிலிருந்து பார்த்துத் தான் ஹென்ரி மஹரத் ஸ்தம்பித்து நின்றான்.

நம் பல்லவர் ஆலயங்களில் தினம் பாரதம் வாசிக்க நிலம் விட்டது பற்றிச் சாசனங்கள் உள்ளன. கம்போடியாவிலும் தினம் பாரதப் பிர வசனம் செய்யவேண்டுமென்று ஒரு கல்வெட்டு (ஆறாம் நூற்றாண்டு)இருக்கிறது. இப்படிக் கலை, இலக்கியம், சமயம் என்று எந்தக் கோணத்தில் ஆராய்ந்தாலும் கிழக்காசிய நாடுகள் அனைத்திலுமே நம் தென் மண்ணின் கலாசாரம் தான் புதைந்து கிடக்கின்றது என்பதைக்காணலாம்.

## சாயி அருளமுதம்



உலக வெற்றிகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். ஜீவராசிகள் அனைத்தின் உள்ளத்திலுள்ளதெய்வீகத்தின் ஒளிமயமான பெயர், வடிவம் ஆகியவற்றின் விளையாட்டே அவை. எல்லாவற்றிலும் உள்ளே உறையும் தெய்வீகத்தைக்காணக் கூடிய பார்வையைத் தேடிப் பெறுங்கள். ஒன்று நல்லதாயிருந்துவிட்டால் நாம் கவலையடைவதில்லை. தீயதாகஇருந்து விட்டால் மட்டுமே துயரப்படுகிறோம். இது ஏனெனில் நல்ல தன்மையே இயற்கையின் பாற்பட்டது. பிழையானவற்றிலோ, நோவிலோ, துயரிலோ நாம் நழுவிவிழும் போது நமது நேர்மையின்மை காரணமாக வியாகூலமும் அச்சமும்அடைகிறோம். நாங்கள்சரியானவர்களாகவும், சந்தோஷமுடையவர்காளகவும். என்றும்ஆனந்தமுடையவர்களாகவும் இருப்பதற்கே இயற்கையானது. திட்டம் வகுத்துள்ளமையாலேயே இவ்வாறு நேரிடுகிறது. இந்தப் பேருண்மையை விளங்கிக் கொள்ளும் ஆற்றலை மனிதன் இழந்து விட்டமை பரிதாபத்துக்குரியது.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## சேவைமுன் பயிற்சி 14ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவைமுன் ஆசிரியர் பயிற்சி நாளை மறுதினம் 14ந் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ள இவ் வதிவிடப்பயிற்சியில் இவ் வருடம் யூலை மாதம் 15ந் திகதியும் அதற்குப் பின்னரும் யாழ்மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் பெற்ற ஆசிரியர்களும் யாழ் மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மடு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களில் ஆசிரியர் நியமனம் பெற்றவர்களும் உள்வாங்கப்படுவர்.

சம்பந்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் நாளை 13ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு பயிற்சி நெறிக்கு தேவையான ஆயத்தங்களுடன் இராமநாதன் கல்லூரிக்கு வருகை தருமாறு பயிற்சி நெறிக்குப் பொறுப்பான வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (இ)

## சமாதான வழிபாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் சமாதானதிற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டி பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் சமாதான வழிபாடு ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் நகரிலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 9 முதல் உயர்தர வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மேற்படி சமாதான வழிபாட்டில் பங்குகொள்ள அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். மறை மாவட்ட இறை தியான குழுவினர் அறிவித்துள்ளனர். (த)

## ஒஸ்ரின் வவு. விஜயம்

(வவுனியா)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்ட்டோஎதிர் வரும் 14ந் திகதி சனிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வவுனியாவுக்கு விஜயம் செய்யும் அவர் வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரச அதிபர் கே.கே. கணேஷ் உட்பட மற்றும் வன்னி மாவட்ட எம்பிக்களுடன் கலந்துரையாடவுள்ளார். (ம)

# எதிர்கால சந்ததி நிம்மதியாக வாழ பேச்சு மூலமான தீர்வே அவசியம்

## யாழ். வந்த அமைச்சர் இம்தியாஸ் வலியுறுத்து



(தென்மராட்சி)

இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இதுதான் இறுதிசந்தர்ப்பமாகும் இப்பிரச்சனையைத் தீர்க்கின்ற வேளையில் தமிழர்களோ, சிங்களவர்களோ, முஸ லிம்களோ விரும்புகின்ற வகையில் நூற்றுக்கு நூறு வீதமான தீர்வை பெறமுடியாது. இந்நிலையில் எமது வருங்கால சந்ததியினர் நிம்மதியாக வாழ வேண்டுமாயின் ஒரு பேச்சு வார்த்தை மூலமாக நாட்டிலே சமாதானம் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த மக்கள் தொடர்பாடல் அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனததால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்றாவது புதிய தொலைபேசி நிலையத்தை அமைச்சர் வைபவ ரீதியாக நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் இந்து கலாசார விவகார அமைச்சர் தி. மகேஸவரன் ரெலிகொம் நிறுவனத் தலைவர் திலக சுமதிபால யாழ். மாநகர முதல்வர் செல்லன. கநதையன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, அரச அதிபர் சண்முகநாதன் மற்றும் ரெலிகொம் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளும பங்குகொண்டிருந்தனர்.

அமைச்சர் தொடர்ந்து அங்கு பேசுகையில்:

நாட்டின் இனபபிரச்சினையைத தீர்க்கின்ற முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் கடுமையாக முயற்சித்து வருகினறார். இருப்பினும் அவரது பணியையும் சிலர் விமர்சித்து வருகின்றனர். அவரது முயற்சியை விமர்சிப்பது சுலபமான காரியமாகுமு. ஆனால் செயலில் காட்டுவது சுலபமான காரியமல்ல.

உலகிலே சமாதானத்தினை ஏற்படுத்திய பல தலைவர்கள் விமர்சனத்தற்கு உளளாக்கப்பட்டது வரலாறாகும். யாழ் மாவட்டத்திலே கடந்த 20 வருடகாலத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக குண்டு வீச்சுக்கள், துப்பாக்கி வேட்டுக்களால், பொருள் இழப்புக்களை சந்தித்திருக்கின்றோம்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வந்திருந்த போது, வடக்குத் தெற்கு மக்களின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள தொலைபேசி வசதிகள் இல்லை. கருத்துப் பரிமாற்றத்திற்குள்ள இத்தடையை நீக்குங்கள் என யாழ் ஆயர் தோமஸ சௌந்தர நாயகம் என்னிடம் வேண்டிக் கொண்டார். அந்தத்தடையை நாம் இன்று முதல் நீக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் இவ்வருட முடிவுகுள் 10 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும். இதன் முதற் கட்டத்தை ஏற்கனவே பருத்தித துறையில் ஆரம்பித்து வைத்துள்ளோம். மன்னாரிலும் 2ஆயிரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும். இப்படியான அபிவிருத்தித் திடடங்கள் மூலம் சமாதானம் ஏற்பட வழிவகை ஏற்படும் இதேபோல் ரூபாவாகினி கூட்டுத்தாபனத்தின் தொலைக் காட்சி சேவையை இன்று தெளிவாக பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத் தப்பட்டுள்ளது என்றார். (இ-77-6)

### பாராளுமன்றில்...

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்று கோஷமிட்டதைத் தொடர்ந்து அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கு எதிராகக் கோஷமிட்டனர். இதனால் நாடாளுமன்றில் சில நிமிட நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பிரதி செயற்குழுத் தலைவர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பிரேரணை மீதான விவாதத்தை நடத்துவதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று சபையில் அறிவித்தார். (த)

### 19வது திருத்தச்...

பங்கம் ஏற்படாத வகையில் அம் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உந்து சக்திகளாக இருப்பதென்ற ஒரே காரணத்தினால் தமிழ்க்கட்சி எம்.பிக்கள் திருத்தசட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர்.

இந்நிலையில் இத்திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கும் 150 அங்கத்தவர்களது ஆதரவு தேவையாக இருப்பதால் அதனை எதிர்க்கட்சி வழங்கும என அரசாங்கம் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 19வது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்படுவது என்ற யோசனையும் தற்போது அரசினால் கைவிடப் பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் சிலர் தெரிவித்திருந்த திருத்தங்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு தனது முன்னைய நிலையில் இருந்து இறங்கி எதிர்க் கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்திருப்பதனால் சட்ட திருத்தமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறலாம் என அரச வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது. (ம)

### பிரதமர்...

பிரதமருடன் லலித்கொத்தலாவல, கென்பாலேந்திரா உட்பட 20க்கும் மேற்பட்ட வர்த்தகப்பிரமுகர்களும் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

பிரதமர் ரணில் தனது அமெரிக்க விஜயத்தின் போது சுமார் ஐந்து தினங்கள் அங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### உள்ளூராட்சி...

போதும் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும், அதற்கு ரணில் விக்கிரமசிங்கா இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

### அரசு புலிகள்...

சிங்கம், புலிகளின் சட்ட நிபுணர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், மற்றும் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் நாளை வெள்ளிக் கிழமை தாய்லாந்து செல்லவுள்ளனர். (ம)

### யாழ். புதிய...

வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ் அரசஅதிபர் க.சண்முகநாதன், யாழ் மாநாகர முதல்வர் செ.கந்தையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசியக் கொடியை ஏற்றி வைத்த அமைச்சர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

முதலாவது தொலைபேசி அழைப்பை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கு ஏற்படுத்தி அமைச்சர் இம்தியாஸ் அவருடன் உரையாடினார். அவரைத் தொடர்ந்து அமைச்சர் மகேஸ்வரனும் பிரதமருடன் உரையாடினார்.

புதிய கட்டடமொன்றுக்கு அடிக்கல் நாட்டி வைத்த அமைச்சர் புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

பிற்பகல் 2.30 மணியளவில் அமைச்சர் தமது யாழ் விஜயத்தை முடித்துக் கொண்டு விமானத்தில் கொழும்பு திரும்பினார். (இ-6-77)

### தொலைபேசி...

கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனே சிபார்சு செய்வார் என்றும் அவரது சிபார்சிற்கு அமையவே இணைப்பு வழங்கப்படவுள்ளது என்றும் குடா நாட்டு மக்களுக்கு தொலைபேசி இணைப்பை வழங்குவதுல் அமைச்சர் மகேஸ்வரனுக்கே உயர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இம்தியாஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### காயமடைந்த...

யிடுவதற்கு தினமும் நூற்றுக்கணக்கான புலிகள் கொழும்புக்கு வந்து செல்கிறார்கள். இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் உள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் தற்போது பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் இல்லாதபடியால் அவர் காயமடைந்த புலி உறுப்பினரை பார்ப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றுவிட்டார் போலிருக்கிறது என்றும் கூறினார். (ம)


**வேப்பம் விதை தேவை**

**தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**

**மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.**

எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் நியாயமான விலை தரப்படும.

[5895]





**சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல திருவிழா**

**21-09-2002**

**சனிக்கிழமை**

12-09-02 வியாழன் கொடியேற்றம்
தினமும் நவநாட்கள் மாலை 5.00 மணிக்கு செபமாலை யுடன் ஆரம்பமாகும்
20-09-02 வெள்ளி - நற்கருணை விழா - இறை தியான வழிபாடு
21-09-02 சனி - திருவிழா
முதற் திருப்பலி காலை 6.00 மணிக்கு
திருவிழாத் திருப்பலி காலை 9.00 மணிக்கு
ஆயர் தலைமையில் நிறைவேற்றப்படும்.

**அன்னையின் பரிந்துரையால் இறையருள் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.**

அருட்திரு. எரிக் ரோஷான் பரிபாலகர்

[5900]



# மருத்துவ பரிசோதனை (Medical Check Up)

- நோய் வருமுன் காப்போம் !
- இளவயதில் திடீர் மரணம் !
- நெஞ்சுநோ, நெஞ்சு படபடப்பு, உடல் பருமன், உடல் மெலிவு, இவை இருந்தும் உரிய வைத்திய பரிசோதனையோ, உரிய வைத்திய ஆலோசனையோ பெறாமல் வணே காலத்தைக் கடத்துவதனால் வீண் இழப்புக்களை சந்திக்க வேண்டியுள்ளது.
- குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர் நோய் உள்ளவராயினும் சரி, நோய் அற்றவராயினும் சரி இந்தவைத்திய பரிசோதனை (medical check up) செய்வதன் மூலம் தங்கள் உடல் நிலையை அறிந்து கொழுப்புச் சத்துக் கூடிய உணவுகளை தவிர்த்து சுக தேகிகளாக வாழலாம்.
- இரத்த அமுக்கம் நோய் (Blood Presure) சலரோகம் (Diabities) போன்ற நோய் உள்ளவர்கள் இந்த வைத்திய பரிசோதனை மூலம் கூடிய பலனடைவர்.
- வைத்திய பாசோதனை செய்வதன் மூலம் நோய் ஏதும் கண்டறியப்படின் ஒரு நோயாளியாகி விடுவேன், என்ற பயத்தினால் எம்மிற் பலர் இதைச் செய்வதில்லை. அது தவறு.
- இன்றே எம்மை நாடுங்கள் !
- வைத்திய பரிசோதனை செய்வதன் மூலம், உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
- வைத்திய பரிசோதனையின் பின் இலவச வைத்திய ஆலோசனை.
- வைத்திய பரிசோதனையின் போது நோய்கண்டறியப்படின, மேலதிக சிகிச்சைக்காக உடனே, வைத்திய நிபுணர்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**SAMPANTHAR MODERN HEALTH CARE**

**NO-60 ARASADY Rd (Thaddatheru Junction)**

**Jaffna**

[5896]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில12 .09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.